# சோலைமலர்



சி. செந்தமிழ்ச்சேய், B.E.,

# சோலை மலர்

புலவர்—பொறிஞர்

சி. செந்தமிழ்ச்சேய்

அன்னை அறிவகத்தார்,
46, கங்கையம்மன் கோயில் தெரு,
இராயப்பேட்டை, — சென்னை — 14

# அணிந்துரை

பேராசிரியர், பைந்தமிழ்ப் பாவலர்
**திரு. அ. கி. பரந்தாமனார். M. A.**

*தமிழகத்தில் யாப்பிலக்கணம் அறியாதார் கவிதை நூல்களை இயற்றித் தண்டமிழ் மொழிக்குத் தீமை செய்துவரும் இக்காலத்தில், தொழில் துறைக் கல்வி கற்றவர்கள் யாப்பிலக்கணம் பயின்று நல்ல கவிதை நூல்களை இயற்றுவதைக் காண என் உள்ளம் பூரிப்படைகிறது.*

*மதுரைப் பகுதியில் மருத்துவத் துறையில் தொண்டாற்றும் ஆங்கில மருத்துவர் ஒருவர் நல்வழியைப் பற்றி நானூறு குறட் பாக்களை இயற்றி இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுற்றுத் திருத்திக் கொடுத்திருக்கிறேன். சேலம், இந்தியக் கைத்தறித் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு. சீனிவாசன் அவர்கள், "இசையும் பாவும்" என்னும் கவிதை நூலை இயற்றி வெளியிட்டிருப்பதையும் பார்வையிட்டு அணிந்துரை கொடுத்தேன்.*

*இப்போது இளம் மின்பொறியாளர் திரு. சி. செயதேவன், B.E., அவர்கள் யாப்பிலக்கணம் அறிந்து இனிய இன்னிசை வெண்பாக்களும் ஆசிரியப் பாக்களும் இன்னிசைக் கலிவெண்பாக்களும் விருத்தப் பாக்களும் அடங்கிய "சோலை மலர்" என்ற இக்கவிதை நூலை இயற்றிச் "செந்தமிழ்ச்சேய்" என்னும் மாற்றுப் பெயரில் வெளியிட்டிருப்பதைக் காணும் வாய்ப்புப் பெற்றுள்ளேன்.*

*இப்படிப் பிற துறைச் செல்வர்கள் பிழையின்றி இயற்றும் கவிதை நூலைக் காணும்போது, பல துறையினர் கவிதைகளை யாத்து வெளியிட்ட அச்சங்க காலம் என் நினைவிற்கு வருகிறது. இதனால் நம் செந்தமிழன்னை இனிச் செழித்தோங்கி மக்கள் மன்றத்தில் நடம் புரிவாள் என்பதில் ஐயம் இல்லை.*

*இளங்கவிஞர் திரு. செயதேவன், B.E., அவர்கள் நடுநாட்டைச் சேர்ந்த இளைஞர்; தமிழின்பால் பேரன்பு மிக்கவர்; தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் புலவர் வகுப்பில் சேர்ந்து படித்து வருபவர். இத்தகையவர் இளமையிலே தமிழ்க் கவிதை மேல் ஏற்பட்ட காதலால் யாப்பிலக்கணம் அறிந்து இனிய முறையில் உணர்ச்சி ததும்ப ஆற்றொழுக்கான நடையில் 1965 இல் நடைபெற்ற இந்திக் கிளர்ச்சியை வைத்து, இக்காலத் திருமணக் கொள்கைக்கு ஒரு சிறிது முரண்பாடு தோன்றும் முறையில் இச் சிறு காப்பியத்தைப் புரட்சி நிலையில் யாத்திருக்கிறார். புரட்சி மன்பான்மை உள்ளவர் இவ்விளங் கவிஞர்.*

*பிழை மலிந்த கவிதை நூல்கள் தான் தோன்றித்தனமாய் வெளிவருகின்ற இந்நாளில், நல்ல முறையில் இந்நூலை யாத்து வெளியிடும் இக்கவிஞர் திரு. சி. செயதேவனின் முயற்சியைப் பாராட்டி வாழ்த்தி இந்நூலைத் தமிழுலகத்திற்கு அறிமுகப் படுத்துகிறேன்.*

*சென்னை — 7.* *அன்புள்ள,*

*13—8—69* ***அ. கி. பரந்தாமனார்.***

# என்னுரை

மாசற்ற சில சொல்லக் கல்லாத நான், பல சொல்லக் காமுற்றுப் படைத்திட்ட இந்தக் கவிதை நூலை ஆய்ந்துணர்ந்த தமிழறிஞர் பெருமக்கள், ஆக்கியோன் குறை பொறுத்து ஏற்று அருள் செய்வர் என நம்புகிறேன். கல்லாத மூடன் கவி பாட எண்ணியனாய்ச் சொல்லால் தொடுத்திட்ட இக்கவிதை நூல், முற்றுங் கற்று முடிபு கண்ட பெற்றியர்க்கு வெற்று நூலெனப் புலப்படுவது வெளிப்படை. இருப்பினும் தமிழ்ப்பால் கொண்ட தலையாய பற்றினால் எழுதியவன் ஏதுமறியா எளியனே என்றாலும் குறை கண்டக்கால், அவைகளைப் பொறுத்து இந்நூலைத் தமிழகம் ஏற்றுக் கொள்ளும் என்பது என் நம்பிக்கை.

எவ்வித முன்பழக்கமும் இன்றி யானே நேரில் சென்று கண்ட போது, இன்சொல்லால் வரவேற்றுத் தன் இடரினையும் நோக்காது, தாழ்வுடைய என் கவிதை நூலைப் பொறுமையுடன் படித்துத் திருத்தங்கள் செய்ததுடன் அணிந்துரையும் வழங்கிய தமிழறிஞர் — பைந்தமிழ்ப் பாவலர் திரு. அ. கி. பரந்தாமனார்,M.A., அவர்கட்கு என் அன்பும் நன்றியும் என்றும் உரித்தாவன.

இந்நூல் அச்சிட்டு வெளிவர எல்லா முயற்சிகளையும் தனதாகக் கொண்ட என் நண்பர் பொறிஞர். நாகராசன், B.E., அவர்கட்குப் பெருங்கடப்பாடு உடையவன் ஆவேன்.

சி. செந்தமிழ்ச்சேய்

*அரசூர்,*
*8—9—69.*

# உள்ளே


| | | |
|---|---|---|
| வாழ்த்து | | 4 |
| பாயிரம் | | |
| 1. | காலை மலர்ந்தது | 7 |
| 2. | அலைபாயும் நெஞ்சம் | 9 |
| 3. | அந்தியில் மலர்ந்த அனிச்சம் | 11 |
| 4. | எழுந்த புரட்சி | 13 |
| 5. | உறவில் தோன்றிய ஊறு | 15 |
| 6. | காதல் கொண்ட நெஞ்சம் | 17 |
| 7. | இன்னமுதே உண்டோ இசைவு? | 19 |
| 8. | அலை பாயும் நெஞ்சு | 21 |
| 9. | பண்பிற்கு நேர்ந்த பழுது | 23 |
| 10. | ஒன்றி அணைத்தாள் உவந்து | 28 |
| 11. | வஞ்சக நெஞ்சம் | 33 |
| 12. | மாலை விரும்பிய மந்தி | 35 |
| 13. | விழிப்புற்ற மக்களும் மொழிப்பற்றும் | 42 |
| 14. | மொழியா? விழியா? | 44 |
| 15. | ஆட்சியாளரின் அறிவற்ற போக்கு | 46 |
| 16. | மறைவில் விருந்து | 48 |
| 17. | கொட்டியது மேளம் | 49 |
| 18. | பொழுது புலர்ந்தது | 52 |
| 19. | வாழ்வு மலர்ந்தது | 55 |

# சோலை மலர்

## தாய்மொழி வாழ்த்து

*கன்னித் தமிழ்வளர்த்த காவலர்க்குப் பின்னுதித்த*
*சின்னவனை உன்னடியைச் சேர்ந்தவனை — அன்புடனே*
*ஆதரித்துக் காப்பதுவும் அன்னையே உன்பொறுப்பு*
*தீதறியேன் நானுந் தெளி.*

## தாய் வாழ்த்து

*பெற்றெடுத்த அன்னை பெருங்கடவுள் அன்னவரால்*
*பெற்றிட்டேன் இப்பிறவிப் பேற்றினையே — நற்றமிழை*
*நாமகிழச் சொல்லி நலஞ்சேர்த்தார் நானவர்க்குப்*
*பூமணக்கச் சேர்ப்பேன் புகழ்.*

## அவையடக்கம்

*தங்குபுகழ் செந்தமிழின் தாரணிந்த மெய்ப்புலவீர்*
*செங்கால் சிறுநண்டு தீரமுடன் சென்றோடிக்*
*கத்துகடல் வெண்டிரையைக் காலால் தடுத்தலுற்ற*
*தொத்ததே இக்கவியும் ஒப்பு.*

# பாயிரம்

*(இன்னிசைக் கலிவெண்பா)*

*மொழிப்பற்றே எங்களது மூச்சென்று மக்கள்*
*விழிப்புற் றெழுந்தெங்கும் மீட்டு மொலிகேட்டுப்*
*பேரறிஞர் அண்ணா பெருமகிழ் வெய்தினராய்*
*ஈரநெஞ் சோடுதன் வீர இளைஞருடன்*
*வாய்மை வழிநிற்க வாட்டம் இழிந்தோடத்*
*தாய்நாட்டை ஆண்டுவந்த தண்டமிழர் நன்னாளில்*
*தென்பெண்ணை ஆற்றோரம் தெற்கே அமைந்திருக்கும்*
*அன்புற்றோர் வாழும் அரசூர் எனுமூரில்*
*ஏர்பிடித்துப் பார்காக்கும் இன்றமிழர் நன்மரபில்*
*சீர்குடியைச் சேர்ந்தோன் செயதேவன் என்பான்*
*பொறியியலில் மின்னியலைப் போற்றிவாழ் போழ்து*
*நெறியுணர்ந்த நெஞ்சினனாய் நேர்மை யறிந்தோனாய்*
*இறவாப் புகழுடைய ஏடுகளைக் கற்றதனால்*
*மறவாமல் தானுமொன்றை வாழ்நாளில் செய்திடவே*
*எண்ணியனாய் இந்நூலை இங்குப் படைத்திட்டான்*
*மண்ணிலுள்ளோர் இன்புறவே மற்று.*

# *1. காலை மலர்ந்தது*

*(இன்னிசைக் கலிவெண்பா)*

*இரவென்னுங் கன்னி திரையகற்ற எண்ணி*
*இரவியவன் மெல்ல எழுந்திடுவான் வானடியில்.*
*எங்கும் எழில்வீசும் சிங்கனூர் மாளிகையில்,*
*மங்கலத் தேரனையாள், மாறா அழகுடையாள்*
*கோல உடைதிருத்திக் கூசு முகங்கழுவிப்,*
*பாலெடுத் தோர்பக்கம் பக்குவமாய் வைத்துக்*
*குடமெடுத்துச் சென்றாள்; குளக்கரையைச் சேர்ந்தாள்.*
*இடவல மன்றியங் கெண்டிசையு நோக்கிப்பின்*
*யாருமங் கில்லை யெனத்து ணிவுகொண்டு,*
*நீரிலுற் றாடலுற்றாள்; நீந்தி மகிழலுற்றாள்.*
*ஏனதுவோ? யாரறிவார்? ஏங்கியது மெய்யுணர்வால்!*
*மீனெனவே அங்குமிங்கும் மெல்ல மிதந்திருந்த*
*பூத்துக் குலுங்குமெழில் பொய்கையிலே பூவையவள்*
*வாத்தெனவே சுற்றிவந்து வட்டமிட்டு நீந்தலுற்றாள்.*
*அப்போ தருகினிலே ஆளரவங் கேட்டிடவும்*
*செப்பு மலரடியாள் சென்று கரையடைந்*
*தீரவுடை நீக்கி வரும்போ தெடுத்துவந்த*
*ஆரணிப் பட்டணிந்தாள்; ஆதவனுங் கண்டதனை*
*மெல்ல எழுதலின்றி மெய்மறந்து நின்றிட்டான்!*
*சொல்லி முடிவதுண்டோ சுந்தரியின் பெண்மையினை?*
*கூந்தலினைக் கோதிப்பின் கொண்டையினைத் தான்முடித்தே,*
*ஏந்து முலைகுலுங்க ஏறிட்டு நோக்கிடவும்*
*பெண்ணவளின் தண்ணெழிலால் பித்தந் தலைக்கேறக்*
*கண்சிவந்து கோவைக் கனியாக நின்றானைப்*
*பெண்ணவளுங் கண்டாள்; பிறந்திட்ட வேட்கையினால்*
*கண்ணிமைக்காள் ஆணழகைக் கண்டு.*

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*நில்லென்ற சொற்கேட்டுக் கன்னி நின்றாள்;*
*நின்றவளை நோக்கியவன் ஓடி வந்தான்.*
*சில்லென்ற முகங்கண்டான், சிவக்கக் கண்டான்;*
*சீற்றத்தை யுணர்ந்ததனால், திகைத்துச் சொன்னான்:*

"இல்லை,நீ பொறுத்திடுவாய் என்றன் குற்றம்;
எண்ணிவந்தேன் நானறிந்த பெண்ணோ என்று.
சொல்வாயோ உன்பெயரைச் சொல்வ தாலே,
சூதேதுஞ் சூழ்வதுண்டோ? சொல்வாய், பெண்ணே."

பேரொப்பே ஓருருவாய்ப், பெண்ணாய், இங்குப்
பிறப்பித்த இறைவனையே போற்ற வேண்டும்!
ஈரெட்டு வயதிருக்கும்; இருந்தால் மேலும்
இரண்டொன்று கூடிடலாம்; எனினும் என்னை?
யாரொப்பார் இவள்தோற்றம்? என்று நெஞ்சில்
எழிலுண்டு நிலையிழந்து நிற்பான் தன்னை,
"ஊருக்குப் புதியவரோ? உரைப்பீர்" என்றாள்;
உணர்ந்தறியான் தமிழொலியை யுணர்ந்து கொண்டான்!

"சிறுவயதில் இங்கிருந்து சென்னை சென்றே
சிற்றப்பன் ஆதரவில் இதுநாள் வாழ்ந்தேன்;
உறவறிந்து காத்தவரும் இறந்து பட்டார்.
ஊருக்கு நேற்றுவந்தேன்; இன்று காலை,
திறந்தவெளிக் கலையெழிலில் திளைக்க வந்தேன்;
திகைத்திட்டேன் உன்னையிங்குக் கண்ட தாலே!
உறவுமுறைப் பெண்ணொருத்தி உள்ளத் துள்ளாள்;
உன்னைப்போல் அவளிருப்பாள்; பேரோ தில்லை."

அவனுரைத்த மொழியுணர்ந்தாள், அன்பு கொண்டாள்;
ஆர்வத்தால் எழுகின்ற ஆசை யாலே,
தவறெனவே உணர்ந்திருந்தும் நேரே பார்த்தாள்.
தமிழ்மொழியின் நலம்பருகும் சான்றோர் போல,
உவந்துமனங் கவிபாட உருகி நாடி
ஒருகோடி உணர்ச்சிகளைத் தோற்று வித்துக்
கவர்ந்திழுக்குங் கண்களையுங் கண்டாள் முன்னே;
கடந்தொழியுங் காலத்தை மறந்தாள் பின்னே!

தூரத்தில் சிலர்வரவைத் தோகை கண்டாள்;
துடிதுடித்து நடந்தபடி சிலவே சொன்னாள்:
"யாரென்று கண்டதுமே அறிந்தேன் இல்லை;
எனைநீங்கள் பொறுத்திடுக! இங்கு மாலை,
நேரத்தில் வந்திட்டால் நீங்கள் சொன்ன
பேரழகி தில்லையினைப் பெறுவர்!" என்றாள்.
தேரொப்ப எழிற்குலுங்கச் செல்வாள் தன்னைத்
தென்னவனின் பேருடையான் பார்ப்பான்; என்னை?

## 2. அலை பாயும் நெஞ்சம்

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*மாலைவரை பொறுத்திருக்க மனமு மின்றி*
*மயங்கிடுவாள், சோர்ந்திடுவாள், வாட்டம் நீங்காள்;*
*காலையிலே குளக்கரையில் கண்ணின் முன்னே*
*கண்டவனை எண்ணியெண்ணிக் களிப்புங் கொள்வாள்;*
*வேலையிலே நாட்டமின்றிப் பலருங் காண,*
*வெடுக்கென்று சிரித்திடுவாள்; வெட்கம் பாராள்;*
*ஆலையிடைக் கரும்பாக அடைவாள் தொல்லை;*
*ஆவலினை அறியாமல் அசையும் வேளை!*

*அலையலையாய் அவன்நினைவே அவளைத் தாக்கும்;*
*அந்நினைவே மகிழ்வளித்துத் துன்பம் போக்கும்.*
*தலையணையில் முகம்புதைத்தாள், தூக்கம் இல்லை;*
*தவறிழைத்த சிறுகுழந்தை நெஞ்சம் போலச்*
*சிலையெனவே அசைவின்றி உடற்கி டக்கச்*
*சிந்திப்பாள் நடந்தவற்றை மீண்டு மீண்டும்.*
*விலைகொடுத்துப் பெற்றதுன்பம் எளிதில் யாரை*
*விட்டுவிடும்? விட்டுவிட்டால் வியப்பும் ஆமே!*

*இளமையிலே பார்த்ததுதான், இன்றே பார்த்தாள்;*
*இடையினிலே கழிந்ததுவோ ஏழெட் டாண்டாம்.*
*இளமையிலே பழகியதோ மிகவி றுக்கம்;*
*இருந்துமென்ன மறந்துவிட்டாள்; மறந்தான் இல்லை.*
*உளவறிய வந்தவன்போல் எதிரில் வந்தே*
*“உன்னைப்போல் பெண்ணொருத்தி தில்லை என்பாள்*
*உளளெனது மனத்தடத்தே” என்று கூறி,*
*உணர்த்திவைத்தான் காதலினை; உறங்காள் கள்ளி!*

நினைவறிந்த நாள்முதலாய்க் கொண்ட எண்ணம்
நெடுமாறன் சொலநினைத்துச் சிவந்தாள் கன்னம்!
“ மனைவிளக்காய் நான்திகழ்வேன், மறுக்கார் யாரும்;
மறுத்திட்டால் உயிர்வாழேன், மாள்வேன் முன்னம்.
அனைவருமே நன்றென்று போற்றும் வண்ணம்
அத்தானின் மனமறிந்து வாழ்வேன் திண்ணம்.
உனைப்பிரிந்தும் நான்வாழ்தல் உண்டோ?” என்றே
உள்ளத்தில் பலவெண்ணி உழல்வாள்; நன்றோ?

நெடுமாறன் திருவுருவை நெஞ்சில் எண்ணி,
நெடுமூச்சு விட்டயர்ந்து நெளிந்தாள் கன்னி!
விடுகின்ற மூச்சாலே விம்மிக் கொங்கை
விருப்போடு தாமசையும் மேலுங் கீழும்!
குடத்தாலே தண்ணீரை அள்ளி அள்ளிக்
குடித்திட்டும் உடற்சூடோ குளிர்தல் இல்லை!
அடங்காத உள்ளுணர்வை அடக்கு தற்கங்
கசைந்தசைந்து வந்ததுகாண் அந்த வந்தி.

வியப்போடு பிறர்தன்னைப் பார்ப்ப தையும்
வீணாக அங்குமிங்கும் ஓடி யாட
நயமின்றி மேலாடை நழுவி வீழ
நாணுற்றுத் தாயதைநேர் செய்த தையும்
மயக்கத்தில் வீழ்ந்திட்ட மங்கை எண்ணாள்;
மனத்தகத்துக் கொண்டவெண்ணம் ஒன்றே சொன்னால்!
உயர்சேர்ந்த இன்றுணையைச் சந்தித் தன்றே
ஊரறியா வண்ணமங்குச் சேர்வ தொன்றே!

## *3. அந்தி மலர்ந்த அனிச்சம்*

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*சிவந்துவரும் மேல்வானம்; சென்று மேய்ந்து*
*திரும்பிவரும் ஆவினந்தான்; தென்னஞ் சோலை*
*தவழ்ந்துவரும் தென்றலதன் சலச லப்போ*
*தமிழொலிபோல் நெஞ்சமதில் அமிழ்தைச் சேர்க்கும்!*
*சுவர்மறைவில் கழுதையொன்று துள்ளி யோடித்*
*தொழில்மறந்து பாடுவதாய்த் தோன்றக் கத்தும்!*
*எவர்மனமும் உவகையினால் ஏற்றங் கொள்ள*
*எழில்பரப்பும் இன்மாலை எழிலே உண்மை!*

*மாமரங்கள் கனிகளுடன் மணந்து காணும்;*
*மந்தியுடன் சேர்ந்திடவே மகிழும் ஆணும்!*
*ஆமணக்குப் புதரிடையே ஆடு மேயும்;*
*அந்தியெனும் பெண்ணவளின் அழகுந் தேயும்.*
*தேமதுரத் தமிழிசையாய்ச் சிரிப்புப் பொங்கத்*
*தென்னையதன் காய்களென இளமை யோங்க*
*நாமணக்கும் உணவெடுத்து நங்கை வந்தாள்;*
*நறுங்குழலாள் உருவசைவின் நளினங் கண்டான்.*

*கண்டதனால் நெஞ்சத்திற் களிப்புப் பொங்கக்*
*காளையவன் இடநேரம் காணான், பூந்தேன்*
*உண்டதனால் மயங்கிமகிழ் வண்டைப் போன்றே*
*உணர்விழந்தே உளமயங்க ஒன்றும் நோக்கான்!*
*துண்டதனைக் கீழ்விரித்தான் சோலை தன்னில்;*
*துடியிடையாள் மெலவமர்ந்தாள்; துடித்துப் போனான்!*
*தொண்டுமனங் கொண்டமகன் சொல்ல லானான்;*
*தோகைமயில் கேட்டிருந்தாள்; துவண்டு போனாள்.*

*“காலையிளம் ஒளியினிலே எழிலைக் கண்டேன்;*
*கன்னியர்தம் நீர்க்குடத்தில் எழிலைக் கண்டேன்;*
*ஓலைகளின் பளபளப்பில் எழிலைக் கண்டேன்;*
*ஒண்டொடியர் மென்னகையில் எழிலைக் கண்டேன்;*

வேலைசெய்வோர் வியர்வைதனில் எழிலைக் கண்டேன்;
வேல்விழியர் முக்காட்டில் எழிலைக் கண்டேன்;
ஆலைவிடு புகைப்போக்கில் எழிலைக் கண்டேன்;
அடுத்தடுத்துக் காணனைத்தும் எழிலைக் கண்டேன்.

தேமதுரத் தமிழொலியில் இன்பங் கொண்டேன்;
தேடிவரு தென்றலிலே இன்பங் கொண்டேன்;
மாமரத்தின் அசைவினிலை இன்பங் கொண்டேன்;
மறைந்தொலிக்குங் குயிலிசையில் இன்பங் கொண்டேன்;
பாமரர்தம் வாய்ப்பாட்டில் இன்பங் கொண்டேன்;
படர்ந்தசையும் பூங்கோட்டில் இன்பங் கொண்டேன்;
தாமரையின் இதழசைவில் இன்பங் கொண்டேன்;
சந்திக்கும் பொருளிலெல்லாம் இன்பங் கொண்டேன்.

விழிகண்டேன், வேல்கண்டேன், வெட்கி நின்றே
வெற்றிகொளும் பெண்வலிமை கண்டேன் இன்றே!
அழிவிற்கே அடிகோலும் அழகின் தன்மை!
ஆய்ந்துணர்ந்தார் சொன்னமொழி அறிந்தேன் உண்மை!
வழுவாத நெறிமுறையை மாற்ற வல்ல
வஞ்சியுன்றன் கொஞ்சுமெழில் கொல்லும் மெல்ல!
எழிலாட்கும் எழிற்சேர்க்கும் எழிலை முன்னம்
எங்குமிவண் கண்டதில்லை; இன்றே கண்டேன்.

எழிலுக்கும் எழிற்சேர்க்கும் எழிலே பெண்ணாய்
என்னெதிரில் உன்னுருவில் இன்றே கண்டேன்.
அழிக்கவெழும் வேலென்பேன் அங்கண் வீச்சை;
அமுதூட்டும் தமிழென்பேன் உன்றன் பேச்சை!
முழுமதியே முகமென்று மூடன் சொல்லேன்;
முழுமதிக்குக் களங்கமுண்டு; முகத்திற் கில்லை.
வழுவறியா என்மனத்தை வாட்டு தற்கு,
வடித்தெடுத்த பொற்சிலையே, எங்கே கற்றாய்?"

தேனொழுகும் அவளெழிலில் திளைத்த மைந்தன்
திறம்படவே உரைத்தமொழி தில்லை கேட்டே,
மாநெடுவாள் கண்ணிரண்டை மறைவாய் ஓட்டி,
மன்னனுடல் கண்டிட்டாள்; மகிழ்ச்சி கொண்டாள்.
"நானிவரை அடைந்திடுவேன்; நலமாய் வாழ்வேன்;
நாட்டிலுள்ளார் தடுத்திடினும் சேர்ந்தே வாழ்வேன்.
ஊனொடுசேர்ந் தொருங்கியங்கும் உயிராய் ஒன்றி
உளங்கலந்து வாழ்ந்திடுவேன்; ஓங்கும் இன்பம்!"

கொஞ்சுமொழி வஞ்சிவிழி குமரன் கண்டான்;
   கொடிமலராய் உடற்செழிப்புக் குலுங்கக் கண்டான்!
அஞ்சுவதை நெஞ்சமெல அடக்கிப் போக்க
   ஆணழகன் ஆவலுடன் அருகே சென்றான்.
நஞ்செனவே அஞ்சியவள் நகர்ந்து கொண்டாள்;
   நங்கைமுகம் மாறிடவே நம்பி அண்டான்.
வெஞ்சினத்தில் பஞ்செனவே விரைந்து சென்றாள்;
   வேகின்ற நெஞ்சினனோ, வெட்கி நின்றான்!

## 4. எழுந்தது புரட்சி

*(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

"கூட்டுவோம் ஊரை என்றான்;
   கூடிய துழவர் கூட்டம்.
தீட்டுவோம் திட்டம் என்றான்;
   சிரித்தனர் செல்வர் கூவி!
வீட்டினுக் கொருவர் சேர்வீர்;
   வீணர்க்கிங் கிடமோ இல்லை!
வாட்டிடுந் துன்பம் நீங்க
   வழியினை ஆய்வோம்," என்றான்.

"உழைப்பவர் பொருளை உண்டிங்
   கூறளி உலுத்தர் கூட்டம்
இழைத்திடுந் தொல்லைக் கெல்லாம்
   இன்றொரு முடிவை ஏற்போம்;
உழைப்பவர் ஒன்று சேர்ந்தால்
   உயரலாம்; உறுதி!" என்றான்.
பிழையினை அறியா மக்கள்
   பிரிந்திடார்; அமர்ந்து கேட்டார்.

"உழைப்பவர் யாரும் இங்கே
   ஒருவராய் இயங்கல் வேண்டும்!
குழைந்திடத் தேவை இல்லை;
   கொடியவர்க் கிறுதி காண்போம்.
உழைப்பினுக் கேற்ற கூலி
   உறுதியாய்ப் பெறுதல் வேண்டும்.
உழைப்பவர் முடிவு செய்தால்
   உலகமே படிதல் வேண்டும்!

இருப்பவர் மனமோ கல்லே;
இனித்திடும் அவரின் சொல்லே!
விருப்புடன் உழைத்தும் ஈயார்;
வெஞ்சினங் கொள்வார்; ஓயார்.
பொறுப்புடன் நடந்தும் போற்றார்;
புன்மையர், உண்மை காணார்.
செருக்குடன் அலைவார்; கீழோர்!
செய்கையோ, சீச்சீ! வெட்கம்!

மனிதனை மிருக மாக
மதிக்கிறார், அடிமை என்பார்;
குனிந்திடக் குத்து கின்றர்;
கொடியவர்க் கெல்லை இல்லை.
இனியதைத் தடுப்போம்." என்றான்;
இனித்திடும் உழவர் எண்ணம்!
"தனித்தினி வாழோம்!" என்றார்;
சரிந்தது கீழோர் திட்டம்!

"எடுத்ததை முடிக்க என்றால்
இயக்கமொன் றிங்கு வேண்டும்.
முடிவினை எடுக்க ஆங்கே
முறைப்படி ஆய்வோம் சேர்ந்தே.
எடுத்ததை முடிப்போம் யாரும்
எழுச்சியுந் துணிவுங் கொண்டே.
அடுத்துமைக் கெடுக்கப் பார்ப்பார்;
அறிந்திடல் வேண்டும்." என்றான்.

இளைஞனின் பேச்சைக் கேட்டார்
எழுச்சியுந் துணிவுங் கொண்டார்!
களைதமை நீக்கும் பெண்டிர்
கருத்தினில் தெளிவுங் கண்டார்!
விளைவினை எண்ணிச் சோரார்;
வேதனை எதையுந் தேரார்.
முளையிடும் புல்லும் ஆங்கே
முழக்கிடுங் கொள்கை என்றே!

சாமியென் றழைத்தே கண்டால்
சகதியில் வணங்க வீழ்வார்,
சாமிக்குஞ் சாமி யாகத்
தலைநிமிர்ந் தசையக் கண்டு,

“நாமினித் தெருவிற் செல்லல்
   நகைத்திடற் கிடமே.” என்றார்.
ஆமென உரைத்தார் செல்வர்;
   அகன்றிடார் வீட்டை விட்டே!

எழுந்தனர் உழவர் கூடி;
   எதிர்த்திட யாரும் இல்லை!
தொழுதனர் செல்வர் சூழ்ந்து;
   தொடரலாம் தொழிலை என்றார்.
அழுதனர், அடங்கி வந்தார்;
   அனைவரும் ஒன்றே என்றார்.
குழுமியே ஒருங்கு பேசிக்
   குறைகளைத் தீர்த்துக் கொண்டார்!

## 5. உறவில் தோன்றிய ஊறு

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

ஒருமுறைக்கு மறுமுறையும் அழைக்கா முன்னர்
   ஓடிவந்து முன்னிற்கும் மனையாற் றன்னை
அருகிழுத்தார்; இருகையால் அணைத்துக் கொண்டார்.
   அந்நிலையில் இடநேரம் எதுவுங் காணார்!
பருகிடவும் இதழமுதம் பக்கம் பார்க்கப்
   பார்த்திட்டார் இளமகளைப் பார்த்த தாலே
அருவருப்பை ஒருபுறமாய் அடக்கிப் போக்கி
   அழகுதுணை முகம்பார்த்தார்; அமைதி கொண்டார்.

“கேட்டனையோ செய்தியினை? “ என்றே கேட்டார்;
   கேள்விக்கு விடையினையுந் தானே தந்தார்.
“ஓட்டமுடன் ஓடிவந்தேன் உனக்கே சொல்ல;
   ஊரெல்லாம் உன்னண்ணன் மகனின் பேச்சே!
ஆட்டுகிறான் விரலசைவில் மக்கள் நெஞ்சை;
   ஆடுகின்றார் மகுடியிசை அரவம் போன்றே!
கூட்டமெனிற் சேர்கின்றார்; கூடி ஆங்கே,
   குரல்கேட்பார் எழுகின்றார்; கொள்கை என்பார்!

உழைப்பாளி இந்நாட்டின் முதுகெ லும்பாம்;
உளருகிறான் ஏதேதோ மேடை ஏறி!
அழையாத விருந்தெனவே இந்த ஊரில்
அறிவென்றும் நெறியென்றும் அரற்று கின்றான்!
உழைப்பாரும் இவன்சொல்லை ஒப்பிக் கேட்டிங்
குழைப்பதற்குப் பெருங்கூலி கேட்கின் றாரே!
இழைத்திட்ட கொடுமைகளை இனியும் இங்கே
இருப்பவர்தாம் பொறுப்பதுண்டோ? இல்லை, இல்லை.

இல்லாதார்க் கிவன்பேச்சே இறைவன் பேச்சாம்;
எழுச்சிதனை யூட்டுவதோ பேச்சின் வீச்சாம்!
இல்லாதார் கெட்டொழிந்தால் இவற்கு மென்ன?
ஏமாறிச் செத்தொழிந்தால் யார்க்கிங் கென்ன?
பொல்லாங்கை விலைகொடுத்து வாங்கு கின்றான்;
புலன்கெட்டார் தலைவனெனத் தாங்கு கின்றார்!
நல்லார்க்கும் தம்மூரில் பிடிப்பும் இல்லை;
நடுங்குகின்றார் செல்வருமே; நல்ல தில்லை!

எம்மதமும் சம்மதமாம்; உலகின் மக்கள்
எல்லாரும் ஒருகுலமாம்; சீச்சீ! மோசம்!
நம்மவர்க்கோ உணர்விலையாம் சேர்ந்து வாழ;
நாடோடி மக்களதைப் புரிந்து கொண்டு
மும்முதலாம் கடவுளரைப் பிறப்பித் தாராம்;
மூளையற்ற நாமுமதை நம்பி னோமாம்!
நம்புவகை சொல்கின்றான்; நானுங் கேட்டேன்;
நாட்டிலுள்ள பார்ப்பனர்க்கும் இவனால் தொல்லை!

நன்றிகெட்ட மனிதரையே தலைவ ரென்றிந்
நாட்டிலுள்ளார் போற்றுகின்றார்; நல்ல தில்லை.
மன்றமதில் சான்றாளர் தலைமை வேண்டும்;
மதித்தவர்சொல் அனைவருமே கேட்க வேண்டும்.
அன்னியர்க்குத் தலைகுனிந்து வாழ்வார் ஆயின்
அழிந்தொழிந்து போவதுவே நன்றாம் என்பான்.
என்னவென்று சொல்வதிங்கே இவனின் பேச்சை?
எழுந்திடுமே ஊரெங்கும் இவனால் சர்ச்சை!

உன்னண்ணன் மகன்றானே; இருந்தும் என்ன?
உனைவந்து பார்த்தானா இந்நாள் மட்டில்?
என்னெஞ்சில் ஓரெண்ணம் இருந்த துண்மை!
எழிற்செல்வி நம்மகளைத் தில்லை தன்னைக்

குன்றொத்த நெடுமாறன் மனைவி யாக்கக்
  கொண்டிருந்த என்னினைப்புங் கொடிய தன்றோ!
அன்றிற்போல் நம்தில்லை அவனைச் சேரின்,
  அடைந்திடுவாள் பெருந்துயரம்; அதனால் வேண்டா. "

தந்தைமொழி மகள்கேட்டாள், தாயுங் கேட்டாள்;
  தவறென்று சொல்லற்குத் துணிவுங் கொள்ளார்.
வெந்துமனம் மிகவாட மீண்டு மீண்டும்
  வினையென்றும் ஊழென்றும் வீணே எண்ணி
நொந்துடலம் சோர்ந்திடுவாள், நோயும் பற்றும்;
  நூலன்ன சிற்றிடையோ மேலும் வற்றும்!
அந்திவர நோய்பெருகும், அலையும் நெஞ்சம்;
  அஞ்சிடுவாள், தவறிழையாள்; ஐயோ, பாவம்!

## 6. காதல் கொண்ட கன்னி

(நிலைமண்டில ஆசிரியப்பா)

ஞாயிறு தோன்ற நாழிகை யொன்றே.
தீயறு குணத்துத் தெய்வ மகளென
வெளிறி விசும்பும் வெட்கிச் சிவக்கும்;
அளவிட லாமோ அன்னவ ளழகை!
பூக்கள் மலர்ந்தன, புதுமணம் ஊட்டின.
ஈக்கள் சுழன்றங் கெழுப்பின இன்னிசை!
மெல்லியற் பெண்டிர் மேனி தழுவிடுஞ்
சல்லா யுடையெனத் தவழ்ந்திடுந் தென்றல்.
என்ன வென்ப தெழிலின் மாட்சியை!
கண்ணைக் கவர்ந்திழு வண்ணக் கலவையே!
இயற்கை எழிலை எண்ணியு மறியா
உயர்ந்த குடியினர் உறங்கிக் கிடந்தனர்.
காதல் நினைவால் கலங்கித் தவிக்கும்
வேதனை கொண்டோர் மிகவும் பாவம்!
அவர்தம் உடலம் அசைதல் இன்றிச்
சுவர்கள் நான்குள் சோர்ந்து துவண்ட!
நெஞ்சோ வென்றால் நினைக்கு முன்னர்
வஞ்சிக் கொடியிடை மடவார் கண்டு,
கொஞ்சிக் குலவிக் கூடி மகிழ்ந்து

பஞ்சென மீண்டு பறந்தே வந்திடும்.
அந்த நிலையில் அவனும் இருந்தான்;
வெந்த நெஞ்சினன் வேறென் செய்வான்!
அல்லி மொக்கென அசையத் தனங்கள்
தில்லை சேர்ந்து சேர்த்துத் தழுவி
இரவில் தந்த இனபம் எண்ணி
ஏங்கிக் கிடந்தான் தூங்கி அறியான்;
கலவிற் கலந்த கன்னியைச் சுற்றி
மனமுஞ் சுற்ற மயங்கிச் சோர்வான்;
நெஞ்சில் நிலைத்த நேரிழை நினைவால்
அறைக்குள் ளாகவே அடங்கி அலைவான்;
கொஞ்சிச் சிரிக்குங் கோவை இதழ்களும்
அஞ்சனந் தீட்டிய அழகு விழிகளுங்
கண்முன் தோன்றிக் காட்சி யளித்தவன்
எண்ணம் பழித்த; இன்னுயிர் அழித்த.
அடியிற் பெருத்தும் அளவாய் உயர்ந்தும்
இடமிடை நோக்க இம்மியும் இன்றி
எழிலுற அமைந்த இருபெருந் தனங்கள்
விழிமுழு தடைத்து வேதனை விளைத்த!
கொங்கைகள் கொடுத்த கொடுமை யோடுடன்
அங்கவள் இடையும் அவனைக் கொல்லும்.
இற்றிட எண்ணும் சிற்றிடை வண்ணம்
பற்றினைத் துறந்த பலரையும் வெல்லும்.
உடையுள் மறைந்தே உயிரினைப் பறித்த
தொடைகள் எழிலைச் சொல்லிடல் எளிதோ?
அழகெலாம் ஒருங்கே அமைந்திடப் பெற்ற
பழுதிலா மொழியள், பங்கய முகத்தள்
தில்லையைச் சேர்ந்து திளைத்து மகிழ்ந்திட
எல்லா வழியும் எண்ணி எண்ணிக்
குழம்பித் தவித்து வழியொன் றறிந்தான்:
‘எழுத்தில் நெஞ்சை எடுத்து மொழிவோம்;
உண்மை உணரின் உள்ளம் உருகிக்
கண்ணீர் சொரிவாள் கண்மணி தில்லை!
அத்தன் படுதுயர் அறிய நேரின்,
முத்தந் தரவும் மொய்குழல் தயங்காள்!
இடத்தைக் குறிப்பின் இரவே வந்து
கடந்திடக் காலம் களிப்பைச் சேர்ப்பாள்!’
என்ற முடிவில் எடுத்துத் தாளைக்
குன்றுயர் தோளான் குழம்புவன்; இயல்பே!

# 7. இன்னமுதே, உண்டோ இசைவு?

*(நேரிசை வெண்பா)*

*இருளகற்றி வாழ்விலொரு இன்பந் தருநல்
லொருவிளக்கே, வாய்த்த ஒளியே, — பருகப்
பழுதிலா வேட்கைதரு பைந்தமிழை, பாலே,
முழுமதி யுன்றன் முகம்.*

*தேன்குடமோ? தெய்வத் திருமகளோ? தேடிவந்த
மான்பிணையோ? வாய்த்த மலர்ப்பொழிலோ? — வான்மதியோ?
என்றுமிள உன்னெழிலில் இன்றிழந்தேன் என்னுயிரை;
ஒன்றிடுதல் நாமென்றோ? ஓது.*

*நீயின்றி நானில்லை, நீயறிவாய் என்னுளத்தை;
காயின்றி என்றுங் கனியில்லை. — தீயன்நான்
உன்னையிங் கெண்ணியெண்ணி ஓடாய் மெலிந்திட்டும்
நன்றென் றிருபதுவோ? நன்று!*

*அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் என்றறிந்தும்
அன்பற் றிருத்தல் அறமாமோ? — என்னுயிரே,
நேரிலெனைக் காண நிலைமைதனை நீயறிவாய்;
சேரிடத்தை நான்சேரச் செப்பு.*

*செப்புச் சிலையுடலே, செம்பவளம் தேனிதழே,
சிப்பியதன் வெண்முத்தே சீர்பற்கள்! — ஒப்பரிய
செந்தமிழின் பண்ணிசையே, செவ்விதழின் இன்னொலியே.
இந்திரையும் நில்லாள் எதிர்.*

*குளக்கரையில் கண்டமுதல் கொண்டேனில் தூக்கம்!
அளப்பில்லை உண்மையிஃ தன்பே. — உளங்கனிந்
தென்னெஞ்சில் வீற்றிருப்பாய்; ஏற்றிடுவேன், போற்றிடுவேன்;
தென்னவளே, இன்சொலால் தேற்று.*

*நேற்றுவரை என்னெஞ்சில் வேற்றுருவம் நின்றதில்லை;
மாற்றிட்டாய் என்மனத்தை; ஆற்றுவனோ? — கூற்றுவனை
நில்லென்று சொல்லி நிறுத்திடலுங் கூடுமிங்
கில்லையென் னெஞ்சிற் கிறப்பு.*

இறுதிவந் தெய்தாலும் இன்முகத்தோ டேற்கும்
உறுதியிங் குண்டென் றுணர்வாய் — நறுமலரே,
கண்டுண்ட பெண்ணெழிலின் காரணத்தால் இன்றென்னை
அண்டிட அஞ்சும் அறிவு.

அமைதிக்கும் பஞ்சமென்றால் ஆளனென் செய்வான்?
இமையால் எனையணைத்த ஏடி! — எமையீன்ற
அன்னை அரும்பேற்றின் அன்பையுங் கண்டதில்லை;
உன்னிடத் துண்டோ? உரை.

உரைத்தமொழி கேட்டதன்பின் ஒண்மைசிறி தின்றி
விரைந்திட்டாய்; பெண்மையிதோ? வெட்கம்! — திரைநிலவே,
புண்பட்ட நெஞ்சினனைப் புத்துலகிற் சேர்த்தற்குக்
கண்ணசைத்தற் போதுமே காண்.

காணுமெதிர் காட்சியெல்லாங் கண்ணேயுன் றன்பெரும்
பூணணி மார்பகமே பூத்துநிற்கும் — நாணமின்றி
உள்ளபடி எண்ணியதை ஒப்பிப்பேன்; ஏனதுவோ?
கொள்ளைகொண்ட ஓவியமே, கூறு.

கூறாக்கி, என்னெஞ்சை வேறாக்கி நீதந்த
ஆறாப்புண் என்றினிதான் ஆறுமோ? — ஏறாளன்
என்றென்னை ஏற்றிட்டார் இவ்வூரார்; இன்றுன்னால்
ஒன்றுமிலான் ஆனேன் உணர்.

கோழையே ஆயினுமென் கோதை யுனையணையின்
ஊழையும் நோக்கான் ஒருபொருட்டாய் — வாழையெனும்
மென்றொடையும் வாட்டடங்கண் முன்னெழிலும் சேரவெனை
இன்னமுதே உண்டோ இசைவு?

அன்று களித்த அழகுமலர்ச் சோலைதனை
இன்றும் அடைந்திடுவாய் இன்னமுதே — சென்றடைந்தால்
காற்றடைத்த கூடொன்றைக் கண்டிடுவாய் என்னுருவில்!
தேற்றிட்டால் வாழ்வேன்; தெளி.

வரவில்லை என்றெண்ணி வந்திடேன் நீங்கி;
இரவுபோம் முன்னே, எழிலாய்! — உரமற்ற
நெஞ்சினன் இந்நிலத்தை நீத்தனன் என்றவுரை
வஞ்சியுனைச் சேரும் வலிந்து.

# 8. அலைபாயும் நெஞ்சம்

*(இன்னிசைக் கலிவெண்பா)*

*ஆடா தசையா தமர்ந்தபடி யாழ்ந்திருந்த*
*வாடாத முல்லைமலர் வாட்டத்தால் நெஞ்சுருகி*
*மூச்சடக்கி மெல்ல முணங்கிடவும் துன்புற்றுப்*
*பேச்சின்றிக் கண்டிருந்த பிள்ளை மனங்கொண்டாள்*
*அல்லி எனுந்தோழி, தில்லைக் குயிரனையாள்;*
*நல்லதை எண்ணியே நல்லதை நாடிடு*
*வல்லமை கொண்டவள், வண்டார் குழலினள்;*
*நில்லார் அவரெதிர் நெஞ்சுரம் உள்ளரும்!*
*அஞ்சுவ தஞ்சி அறிவோ டொழுகினும்*
*கொஞ்சு மொழியாள், குழவி விழியாள்;*
*பழக இனிக்குநம் பைந்தமிழ்ப் போன்றாள்!*
*அழகி எனினும் அடக்கம் வழுவாள்!*
*எழுந்தாள், நடந்தாள், எதிரே அமர்ந்தாள்.*
*செழித்திடுங் கூந்தலைச் சீராய் வருடி,*
*உரைப்பாள் சிலமொழி உள்ளங் குளிர:*
*"உரைத்திடு தில்லை, உணர்ந்திடு தொல்லை.*
*அனைத்து மொழிய அகலுமுன் நோயே!*
*நினைக்க நினைக்கவுன் நெஞ்சே வலிக்கும்.*
*அறிவேன் அனைத்தும்; இருந்துநான் கேட்பேன்;*
*குறிப்பால் உணர்ந்தேன், குழப்பம் எதற்கோ?*
*அவரையே எண்ணியிங் கல்லல் அடையுந்*
*தவற்றினைச் செய்துள் தடுமா றிடுவாய்!*
*உனக்கொரு தோழி உடனிங் கிருந்துங்*
*கனவிடை ஆழ்வாய்; கவலையில் தாழ்வாய்.*
*இனியிந் நிலைமை எழிலிரு தோழி,*
*மனத்திடைக் கொள்ளும் மடமை மறப்பாய்.*
*எதையும் உனக்கெனில் எண்ணேன்; முடிப்பேன்.*
*சிதைய துயரம் சிறப்புடை அண்ணலைக்*
*கொண்டுவந் திங்குன்றன் கோயில் நிறுத்தநீ*
*கண்டு மகிழ்வாயென் கண்ணே, சரியா?"*
*அறிவுடை அல்லிதன் அன்புரை கேட்டு,*
*வறியவள் பெற்றால் வடிவுடை மைந்தனை*
*எப்படி இன்பம் இயல்பாய்ப் பெறுவளோ,*
*அப்படிக் கொண்டாள் அகமகிழ் தில்லை!*
*இடையிற் சிறிதே இதழ்நகை நீக்கி,*
*விடையினைத் தேடி வியந்தாள்; வினாடியே."*

அன்புடை தோழி, அமுதே உரைத்தவை.
என்னவர் இங்கின் றெழுதிய ஓலையை
ஆய்ந்து படித்தபின் ஆவன செய்திடு,
சேய்மனந் தேர்ந்துணர் தாய்மனங் கொண்டாய்."
விணிகை இடையே விரலைச் செலுத்தி
மணிமுகம் நாண மலர்விழித் தில்லை
முடங்கல் எடுத்ததில் முத்தம் பொருத்திக்
கடவுளெனச் சேர்ந்தவிளங் கன்னியிடந் தந்திடவுந்
தாவிக் குதித்தாடுந் தன்னெஞ்சிற் காளாகி
ஆவலுடன் வாங்கியதை அல்லி யுடன்முடித்தாள்.
"நல்லதடி, தில்லை; நடுக்க மினியில்லை!
இல்லதென் நீயுரைப்பாய், இன்றுணைவன் தோள்சேர்ந்தால்?
அந்தியே சோலைசென்றவ் வாளனைக் கூடிடுவாய்.
சிந்தனை ஏதுமின்றிச் சேர்ந்தணைவாய்; இன்புறுவாய்."
தோழியின் பேச்சால் தொடர்பிலா ஆசையெழ,
"வாழிய தோழி"யென்று வாழ்த்தினாள் நெஞ்சலைய.
"உண்மைதான், தாய்தந்தை ஊரிலும் இன்றில்லை.
எண்ணவே இன்பம்; இருந்தும் ஒருதயக்கம்.
பாதையில் யாருமெனைப் பார்த்திட்டால் என்செய்வேன்?
பேதை மனமயங்கும்; பின்னுக்குத் தானிழுக்கும்.
நல்லபடி எண்ணியின்று நானவரைப் பெற்றிடவே,
சொல்க ஒருவழியைச் சொந்தமுள்ள என்றோழி."
தில்லை திறந்துரைத்த சொல்லை மனத்துன்னி
அல்லி மறுமொழியை அன்போ டெடுத்துரைப்பாள்:
"சொல்வதற் கென்னவினி சுந்தரியே நீவைத்தாய்?
செல்லவுங் கூடாது; சேர்ந்திடனும் உன்னவரை!
ஒன்றே அதற்குவழி, நன்றதுவே; நானறிவேன்.
சென்றவரை இங்குச் செலுத்திடுவேன்; நீயஞ்சாய்.
கண்ணிழந்த மூப்பினாள் காவலன்றோ இன்றுனக்கு?
எண்ணிய தின்னே இனிதேறும்; நான்செல்வேன்.
போவதற்கும் முன்னே புரியவைப்பாய், ஓரையம்.
ஆவலினைக் கூட்டி அமைந்திட்ட இக்கடிதம்,
வஞ்சியுனைச் சேர்ந்த வழியாதோ?" கேட்டிடவும்
"கொஞ்சமும் வெட்கமின்றிக் கூரையைப் பார்த்தபடி
நின்றிருந்தேன்; அப்போதும் நெஞ்சில் அவர்நினைவே!
சென்றிட்டார் யார்யாரோ, ஒன்றுநான் காணவில்லை.
பஞ்சை மனம்பதைக்கப் பாவி உயிர்தழைக்க
அஞ்சா தவரங் கணுகிட்டார் நம்வீடு.
என்கையைப் பற்றிப்பின் இக்கடிதம் ஈந்தவரோ,
தன்னந் தனியளெனச் சொல்லநான் எண்ணி
அறிவிக்கு முன்னர் அகன்றிட்டால் என்செய்வேன்?
அறிந்திடுக; இப்போ தகன்றிடுக" என்றுரைத்துத்
தள்ளிக் கதவடைத்தாள் தாண்டுகின்ற ஆசைக்குக்
கள்ளி அறியாள் கதவு.

# 9. பண்பிற்கு நேர்ந்த பழுது

*(நேரிசை வெண்பா)*

*வெள்ளிநிலா வானடியில் மெல்ல வெளிவந்தே*
*உள்ளத்தில் இன்ப உணர்வூட்டும் — புள்ளினமோ*
*தென்றலொடு போட்டியிட்டுத் தேன்சுவைத்த போதையினால்*
*என்றும் எழுப்பும் இசை.*

*இசைகேட்டுக் காவினங்கள் யாவு மியல்விட்*
*டசைவற்று நின்ற அறவே — மிசையுண்ணப்*
*பள்ளிவிட்டு மீண்டுவிரை பாலகனை ஒப்பவல்லி*
*தள்ளி நடந்தாள் தனித்து.*

*தனித்து நடந்துவரு தங்கநிகர்ப் பெண்ணைக்*
*கனிந்து வரவேற்குங் காலே — வனத்துறையும்*
*புள்ளினமும் பண்மறந்து பூவை முகம்நோக்கி*
*உள்ளம் இழந்த உவந்து.*

*உவகை பெருக்கெடுக்க ஊறுமுணர் வால்கண்*
*சிவக்க மரநிழலைச் சேர்ந்தான் — தவறறிந்தும்*
*தேடிவரு  மானாள் தெளிவடைந்து நீங்குமுன்பு*
*கூடிட வேயுறுதி கொண்டு.*

*கொண்டல் முழுநிலவைக் கொண்டதனால் பூஞ்சோலை*
*கண்டிடுமே காரிருளின் கைவண்ணம் — கொண்டையணி*
*பூப்பாரந் தாங்காப் புகழ்மொழியாள் நீண்டுயர்ந்த*
*தோப்போரஞ் சேர்ந்தாள் துணிந்து.*

*துணிவோ டொளிந்திருந்த தோகைமண வாளன்*
*இணரெரி நெஞ்சடக்கி ஏவ — அணிமலரை*
*எண்ணாது பற்றி இருகையால் சேர்த்தணைத்துப்*
*பண்பிற்குச் செய்தான் பழுது.*

*பழுதுவரு மென்று பகுத்தறியாப் பேதை*
*அழுவாள்; துடித்திடுவாள்; ஐயோ! — கொழுகொடியைச்*
*சேர்த்திழுத்து மெய்தழுவிச் சேர்ந்திட்ட காளையினை*
*யார்தானென் செய்வார் இனி?*

இனியவள் உற்றவின்னல் எண்ணினும் என்னாம்?
முனிவினும் முற்றாம் முடிபே — புனிதமாம்
கற்பென்னுந் திண்மைதனைக் காக்குந் திறமற்றாள்
சிற்பமென நிற்பாள் திகைத்து.

திகைத்தறியாக் காட்டிடையே சேர்ந்தமரை யொப்ப
வகைமறந்தே நின்றாள் வனிதை — நகையிழந்த
முல்லைமலர் அல்லியிடம் மூண்டிருந்த வேதனைக்
கில்லை உலகில் எதிர்.

எதிராகச் சோர்ந்திருந்த இன்முகத்தான் தன்னைப்
புதிராகப் பார்த்திருந்தாள் பூவை — விதியாமோ?
தில்லைக்குத் தூதுவந்து தொல்லைக்கு வாழ்வுபட்டாள்;
சொல்லற்கும் வேறுண்டோ சொல்?

சொல்லற்கும் ஏதுமின்றிச் சுந்தரி சென்றிடவும்
மெல்லத் தொடர்வான் மிடுக்கின்றி — அல்லவையே
செய்தவன்றான்; ஆனாலும் வெட்கம் சிறிதுமின்றி
மெய்த்தடம் பற்றுவான் மீண்டு.

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

நெடுமாறன் :

“பேசாமல் என்னைவிட்டுப் பிரிந்து செல்லப்
    பெண்ணெழிலே நான்செய்த பிழையும் என்ன?
கூசாமல் நாடிவந்து கூடிப் பின்பு,
    கூறாமல் செல்வதுவோ கொண்ட கொள்கை!
வீசாதோ தென்றலென்று வேண்டி நின்றேன்;
    விரும்பிவந்தாய், மகிழ்வுதந்தாய் சற்று முன்னர்.
தூசாமோ நானுனக்கும்? தோகை சொல்வாய்;
    சொன்னபின்னர் என்னைவிட்டுத் தொடர்ந்து செல்வாய்.

உளங்கலந்த பின்பேநாம் உடல்க லந்தோம்.
    உண்மையிஃ தென்மொழியை உறுதி செய்வாய்.
குளங்களென மாறினவே குவளைப் பூக்கள்!
    கொண்டதுயர் எடுத்துரைப்பின் கொள்வேன் நாட்டம்.
இளங்கொடியாம் எழிலுடலம் என்றன் கூட்டால்
    எழுப்பிடுதோ உண்ணோவை? இயல்பே எங்கும்!
களங்கண்டார் வலியுறுதல் காலங் காலம்
    கண்டதுதான், களிப்பதுவே; கலக்கம் வேண்டா.

என்னதில்லை? ஏன்கொண்டாய் இந்த மௌனம்?
இப்படித்தான் நடத்துவதோ இனியும் என்னை?
கன்னலன்ன உன்சொல்லைக் காதால் கேட்கக்
காலமெலாங் காத்திருந்தும் பலனோ இல்லை.
உன்செயலால் என்னெஞ்சம் உணர்வி ழக்கும்;
ஊடலென்றால் கூடிடலாம் முடிவில் நாமும்.
அன்பொழுக எனைச்சேர்ந்திங் கணைத்த வண்ணம்,
அத்தானெ னவழைத்தால் மகிழும் எண்ணம்."

அல்லி :

"சேர்ந்தணைத்தீர்; முத்தமிட்டீர்; செம்மை இன்றிச்
சேர்ந்திட்டீர் என்னுடலைச் சீச்சீ! வெட்கம்!
யார்வருவார் என்பதைநீர் அறிந்தி ருந்தும்
என்னையிங் கடைந்திட்டீர்; இதுவோ காதல்?
ஊர்துயிலும் நேரத்தில் உள்ளங் கொண்ட
உன்னத்தை மகளிங்கு வந்தி ருந்தால்,
நேர்மையிலா இச்செயலால் நெஞ்சம் வாடி
நிச்சயமாய்ச் செத்திருப்பாள்; செத்தேன் இல்லை.

இருணிறைவில் தில்லையெனத் தவறாய் எண்ணி
இழந்திட்டேன் என்னுணர்வை என்று சொன்னால்,
ஒருகணமும் நானொப்பேன்; ஏனோ வென்றால்,
உங்களுள்ளம் நானறிவேன்; தில்லை காணாள்!
கருதிடுவீர் பெண்ணினத்தை இன்பக் கூட்டும்
கருவியென; வேறென்ன? காட்டும் செய்கை.
உருவமதில் தில்லைதான்; ஆனால், நெஞ்சில்
உலகத்தை உணர்ந்தறியாப் பெண்ணோ இல்லை.

பிள்ளமனம் அமைந்தவெழில் தில்லை நெஞ்சைப்
பேதலிக்க வைத்திட்ட பெரிய ஞானி!
உள்ளத்தை ஒருத்தியிடம் கொள்ளை கொண்டீர்;
உறவறியா என்னுடலில் ஓய்வு கண்டீர்!
கள்ளத்தை மறைப்பதற்குக் கனிவு பொங்கக்
கருத்தற்ற பொய்களையும் கலந்து சொல்வீர்!
உள்ளத்தை இழந்தவளால் வாழக் கூடும்;
உடலுறவு கொண்டவளால் என்ன கூடும்?

இதயத்தில் சுமைதாங்கி ஏகும் முன்னர்,
ஏற்றுவந்த செய்தியினைச் சொல்வேன்; கேட்பீர்.
கதவோரம் நின்றபடி தில்லை வீட்டில்
காத்திருப்பாள்; நீர்சென்றால் களிப்புக் கொள்வாள்.

இதமோடு புகழ்ந்துரைத்தே இனியர் நீங்கள்
எழுதிட்ட கடிதத்தால் ஏக்கம் மீற,
எதிர்பார்த்து நின்றிருப்பாள்; இன்னே செல்க.
யாருமவண் உடனிருக்கார்; தில்லை மட்டே."

நெடுமாறன் :

"உணர்ந்திட்டேன் என்செயலின் உயர்வு தன்னை;
ஊழியென உன்வாழ்வில் நான்பு குந்தேன்.
கணஞ்சிறிதும் புலனாட்டம் காத்தி ருந்தால்,
கட்டாயம் கண்டிருப்பேன் மாற்றம் தன்னை.
பணம்படைத்தார் கூசாமல் நாளுஞ் செய்யும்
பண்பற்ற செயலினையே நானுஞ் செய்தேன்.
மணம்பரப்பி மகிழ்வூட்டும் மலரை வீணே
மண்மீது வீசிட்ட மடையன் ஆனேன்!

அல்லியென்ப துன்பெயரே; அறிவேன் நானே.
ஆங்காங்கு நிகழ்கின்ற கூட்டந் தோறும்
நல்லுணர்வோ டனைவருடன் நாடி வந்தென்
நாமொழியில் கிளர்ச்சிகொளும் பெண்ணும் நீயே!
தில்லையென உன்னையெண்ணித் தீங்கி ழைத்தேன்;
தெய்வமென ஒன்றிருப்பின் என்னை நம்பும்.
இல்லயில்லை; பொறுத்திடவும் சொல்ல வில்லை;
இழைத்துவிட்ட கொடுமையினைப் பொறுப்பார் இல்லை!

அல்லி :

"பொய்யுரைப்ப தாண்களுக்கோர் பொழுது போக்கு;
பூவையர்கள் நம்புவதே உலகின் வாக்கு.
மெய்யுரைக்க நீங்களினி முயலல் வேண்டா;
மேடையிலே முழக்கிட்ட மேன்மை உண்டே!
தெய்வமென உங்களைநான் போற்றி வந்தும்
சிறப்பிழந்து நிலைதாழும் செய்கை செய்தீர்!
செய்தவனே வந்தெதிரில் எதுசொன் னாலும்
சேர்ந்திட்ட இழிவிற்குத் தீர்வும் ஏது?"

நெடுமாறன் :

"அறிந்தவட்போல் பேசுகின்றாய்; ஆனால், நீயோ
அறிந்தாயில் உன்னெஞ்சம்; அறிந்தி ருந்தால்,
உறவுகொள நானுன்னை அணைந்த போதே
உரைத்திருப்பாய் உண்மையினை; ஒன்றும் இல்லை.

*திறந்தளித்தாய் இதழிரண்டைத் தேன்சு வைக்க!*
*திகைத்திடவே சேர்த்தணைத்தாய் தென்றல் வாட!*
*மறந்திருந்தாய் நாணமென நானே சொன்னால்,*
*மறுத்திடுவாய் என்கூற்றை; ஆனால் உண்மை!*

*உடனுழைத்தாய் இறுதிவரை; இருந்தும் இப்போ*
*துத்தமிபோல் நடித்திடுவாய்; கோபம் வேண்டா.*
*புடமெடுத்த தங்கம்நீ, அறிவார் யாரும்;*
*புத்தியிலும் உனக்கிங்குப் போட்டி இல்லை.*
*இடங்கலந்து மாறிடவே இன்பங் கண்டோம்;*
*இருவருமே தவறிழைத்தோம் சரியாய்ச் சொன்னால்!*
*திடமிகுந்த நெஞ்சினளே, தெரிந்தோ மற்றோ*
*செய்துவிட்ட தவற்றிற்குத் தீர்வும் என்னே?"*

*அல்லி :*

*"அன்றில்லை, இன்றில்லை; என்றும் நீங்கள்*
*அழகாகப் பேசுவதில் மன்னர் மன்னர்!*
*நன்றில்லை நாமுமினித் தனித்தி ருத்தல்;*
*நாளைக்கும் நாமிங்கு வரத்தான் வேண்டும்.*
*ஒன்றில்லை, இரண்டில்லை; நிறைய உண்டு;*
*ஒளிக்காமல் உரைத்திடுவேன் நாளைத் தொட்டு!*
*சென்றுடனே இப்போது வீட டைந்து,*
*தில்லைக்கு மனமகிழ்வைச் சேர்த்தல் நன்று.*

*பிள்ளைமனங் கொண்டவள்நம் தில்லை யாகும்;*
*பிழைமீண்டும் நிகழாமல் எண்ணிச் செய்வீர்.*
*கொள்ளைகொண்டீர் அவள்நெஞ்சைக் குற்ற மில்லை;*
*கொளவேண்டா உடலுறவு மணக்கு முன்பு.*
*உள்ளமதை விரும்புவதே காத லாகும்;*
*உருவத்தை விரும்புவதோ காம மாகும்.*
*உள்ளபடி இன்றிரவு நடந்த யாவும்*
*உள்ளத்தில் உறையட்டும்; உரைத்தல் வேண்டா,"*

## *10. ஒன்றி அணைத்தாள் உவந்து*

*(இன்னிசை வெண்பா)*

*பொழில்நிலவாய்க் கன்னிமுகம் பூத்தெழில் கூட்ட*
*விழிமலரை நேரோட்டி வீதிவழி நோக்கித்*
*தொழுதிருந்தாள் கண்டாள் தொலைவிலவன் தோற்றம்*
*உழுதிடுமே நெஞ்சை உவப்பு.*

*உவப்புத் தலைகாட்ட ஒண்டொடியின் நீட்டண்*
*குவளை மலர்க்கண்கள் கொண்டதே கோலம்!*
*பவள இதழ்கள் படபடக்கப் பாவை*
*கவலையற்று நின்றாள் களித்து.*

*களிறொத்த மாறனுக்காய்க் காத்திருந்த கன்னி*
*தெளிவற்ற இன்முகத்தைக் கண்டு திகைப்படைந்*
*தெண்ணாத எண்ணி எழிலிழந்த பூமலராய்க்*
*கொண்டாள் அகத்தில் கொதிப்பு.*

*கண்ணே எனவழைத்துக் கைகளால் தொட்டிழுத்*
*தெண்ணிடு முன்னர் இருநூறும் முந்நூறும்*
*ஈவான் எனநினைத் தேமாறி நின்றிட்டாள்*
*நாவால் உரைக்காள் நலிந்து.*

*அத்தான் எனவழைத் தன்போ டரவணைத்துத்*
*தித்திக்க முத்தங்கள் சேர்ந்தடைய நெஞ்சில்*
*கனவோ டதுவரைக்குங் காத்திருந்த தில்லை*
*இனியதெதும் எண்ணாள் இனி.*

*சேர்த்தவன் கட்டுடலைச் சேர்ந்து தழுவிடவே*
*ஆர்த்தெழுந்த நெஞ்சகத்திற் காசை மொழியுரைத்துப்*
*பார்த்திருந்தாள் மாறனங்குப் பக்கத்தில் வந்துநின்றும்*
*வார்த்தையெதுங் கூறாள் வலிந்து.*

ஆசைக் கணையிட் டறிவினையே முன்நடத்தித்
தூசைத் துடைப்பவட்போற் றோள்மேற் கிடந்திட்ட
மேலாடை தள்ளிவிட்டு மெல்லச் சரிசெய்ய
வேலாட்டங் கண்டான் வியந்து.

ஓங்கி உயர்ந்தெழுந்த ஒய்யார மார்பகத்தைத்
தாங்குந் தரத்ததுவோ தண்கொடிப்பூ ஒக்கும்
விழிகணையாள் வில்லிடைதான் என்றே வியப்பான்
அழிவான் இடையழகால் ஆங்கு.

மறைவாய் உடையகத்தே மார்பகங்கள் தம்மைச்
சிறைப்படுத்தி வைத்திருந்தாள் தில்லையே என்றாலும்
ஆணழகன் முன்னர் அணைத்தற்கி ருப்பதையே
காணத் திமிருங் களித்து.

தில்லை எனவழைத்துத் தேரொத்த மார்பினளை
மெல்ல அருகிழுத்து மேனி படநிறுத்திச்
சொல்வான் நடந்தனைத்தும் சுந்தரியுங் கேட்டிருந்தாள்
இல்லை துயர்க்கங் கெதிர்.

தூதுவந்த அல்லியினைத் தோளணைத்துச் சேர்ந்ததையே
சூதின்றிச் சொல்லிச் சுழற்கயலை நோக்கத்
தவறிழைத்த சேய்தன்னைத் தாங்குந்தாய் ஒப்ப
அவளிடத்துக் கண்டான் அருள்.

நெடுமாறன் :

"நெஞ்சரம் மிக்குடையோய், நீநிலைமை முற்றறிந்தும்
கொஞ்சமுங் கொண்டாயில் கோபமே என்தவறால்.
தஞ்சமாய் உன்மடியைத் தங்கமே நானடைந்தேன்;
பஞ்சையென் செய்வான்? பகர்.

நிலவை மறைத்தங்கு நின்றதுவோ மேகம்;
புலனை அழித்தறிவைப் பொய்த்ததுவோ மோகம்!
குறித்தபடி வந்தவளும் நீயெனவே கொண்டு,
பறிகொடுத்தேன் நல்லறிவைப் பாழ்.

தடுத்துநிறுத்தி என்னைத் தளிருடலாள் அல்லி
எடுத்தே உரைத்தங் கெதிர்ப்பினையே காட்ட
விடுத்திருப்பேன் வேண்டா வினையினையே; ஆனால்,
இடித்து முரைத்தாளில் ; என்?

இறுதிவரை என்னுறவில் இன்பங்கொண் டாளென்
றுறுதியிட்டு நானுரைக்கேன்; உண்மை அறியேன்.
இழந்திருந்தேன் காமத்தால் என்னறிவை என்றால்
தொழுதும் வழியுண்டோ? சொல்.

அடித்துத் தடுத்துரைத்தும் ஆங்கென் அணைப்பில்
விடிவில்லை என்றறிந்து வெட்கி அதனால்,
படிந்தொன்றி இன்பம் பகிர்ந்தேற்றிட் டாளோ?
பிடிநடையாய், எண்ணேன் பிற.

களங்கத்தை என்செயலில் காணாய்நீ என்றே
விளக்கிட்டேன் உள்ளனைத்தும் விண்மதியே கேட்பாய்.
குறைகண்டால் கூறிடுவாய்; கொஞ்சமும் நம்முள்
மறைவுண்டோ ? ஏனோ மலைவு?

தில்லை எனநினைத்தே அல்லிக்குத் தீங்கிழைத்தேன்;
அல்லிதான் என்றங் கறிந்திருந்தால் நிச்சயமாய்ப்
பொல்லாத தேதும் புரிந்தறியேன்; உள்ளபடி
நல்லவனே நானென்றும்! நம்பு.

நம்பிடுவாய் என்றே நடந்ததைநான் சொன்னேன்;நீ
நம்புவையோ? இல்லை, நடிப்பென்று தள்ளுவையோ?
எண்ணுவற்றைச் சொல்லுவையேல் எண்ணிப் பிறகேநாம்
கண்டிடலாம் வாழ்வின் கடன்."

தில்லை :

"தில்லை யெனநினைத்தேன் அல்லியினை என்றுரைத்தீர்;
அல்லியன்றி நானங் கழைத்தபடி வந்திருந்தால்
கொண்டிருப்பீர் என்னையும்நீர் கொஞ்சமுங் கூச்சமின்றி!
உண்டோவென் கூற்றில் ஒளிவு?"

நெடுமாறன் :

செப்பு மலரடியாய், சிங்கார உன்னுடலை
எப்படியுஞ் சேர எதிர்பார்த்தே காத்திருந்தேன்.
இப்போதும் நெஞ்சில் எழுகின்ற ஆசையினைத்
தப்பென்று தள்ளேன்நான் தான்.

மனைவியென் றுன்னை மனத்தகத்துக் கொண்ட
வினைநாள் முதற்கொண்டு வேறெதும் எண்ணியிலேன்;
இன்றோ பலவாறிங் கெண்ணாத எண்ணிடவும்
தின்றிடுமே நன்னெஞ்சைத் தீ.

தில்லை :

*நடந்து முடிந்தவற்றை நாமெண்ணி நோதல்,*
*விடமென்று சொல்வேனவ் வேதனையும் வேண்டேன்.*
*கடந்ததையும் நெஞ்சக் கருத்தகத் தெண்ணி*
*எடுப்போம் முடிவொன்றை இங்கு.*

*உள்ளத்தால் நாமிருவர் ஒன்றாக நின்றாலும்*
*பள்ளத்தில் வீழுற்ற அல்லியுடை வாழ்வினையும்*
*உள்ளத்தில் எண்ணி யுறுவழியை நாடிடுவோம்.*
*கள்ளமிலாப் பேச்சிலுண்டோ காழ்.*

*உங்கள்மேல் கோபம் ஒருநாளும் நான்கொள்ளேன்;*
*தங்குதடை யின்றியிங் கெங்கள் இருவரையும்*
*சேர்த்து மணமுடிக்கச் செவ்வனே வாழ்ந்திடலாம்,*
*ஊர்போற்ற நாமே ஒருங்கு.*

*உடல்கலந்தாள் அல்லி; உளங்கலந்தேன் நானும்.*
*திடமிகுந்த நெஞ்சமொடு செய்வதையே தீரமுடன்*
*செய்திட்டால் யார்தான் சினந்திடவுஞ் செய்திடுவார்?*
*தெய்வமும்நேர் நில்லா தெளி.*

*அல்லியென் தோழி, அவளுள்ளம் நானறிவேன்;*
*தொல்லை யொருபோதும் தோற்றாது வாழ்ந்திடுவாள்!*
*இல்லாதாள் என்றாலும் என்றும் இனியவளே;*
*நல்லாள் அவட்டுணை நன்று.*

*என்னை மணந்தபின்னர் இன்னொருத்தி சேர்வதையே*
*அன்னைதந் தைமற் றனைவருமே ஏற்கார்;*
*அவளைநீர் முன்மணந்தால்அத்தனையுங் கூடக்*
*கவலை அகலும் கடிந்து.*

*ஒருவற்கே வாழ்வில் ஒருத்தி எனச்சொன்னார்*
*ஒருத்திக்கே என்றும் ஒருவன் எனச்சொல்லார்!*
*ஒன்றிற்கு மேலான ஒண்டொடியர் கைப்பற்றி,*
*இன்றும் பலர்வாழ்வர் இங்கு.*

*நெஞ்சிருந்தால் அச்சமில்லை, நிச்சயமாய் வாழ்ந்திடலாம்.*
*கொஞ்சிடுவீர் அல்லியுடன்; கொஞ்சநாள் போகட்டும்.*
*பஞ்சணையில் என்னுடலும் பாவை யவளுடலும்*
*கொஞ்சிடுமே உங்களையே கொண்டு.*

*தூற்றிடும் ஊர்மக்கள் போற்றிப் புகழ்பாட,*
*ஏற்றிடுவோம் இல்லறத்தை ஏதும் இடரின்றி.*

ஒன்றிட்டால் எங்களுடன் உத்தமராய் நின்றிடுவீர்;
நன்றென்பேன்; உண்டோ நகைப்பு?

இருவரையுங் காக்க இயலுமோ என்று
பொருளெண்ணி இன்று பொருமிடவும் வேண்டா.
இருப்பதையே கொண்டு விருப்புடனே நாளும்
கருத்துடனே வாழ்வோம் கலந்து.

நெஞ்சி லுறுதி நிலைத்திருந் தாலன்றிக்
கிஞ்சித்தும் இவ்வுலகில் கேடின்றி முன்னேறல்,
மாற்றாரை வென்றிட்ட மன்னர்க்கும் ஆகாதாம்!
ஆற்றலுடன் வேண்டும் அறி.

தோன்றியதைச் சொன்னேன்; துடியிடையை விட்டகல்க.
தேன்சிந்தும் செவ்விதழாள் அல்லியுடன் சேர்ந்துயர்
வானும் நிலவுமென வாழ்வமைந்த சின்னாளில்
நானும் உமையடைவேன்; நம்பு.

இடையில் படிந்துதொல்லை ஈட்டுங்கை நீக்கி
நடையிட் டிவணிருந்து நான்பார்த்துப் போற்ற
விடைபெற்றால் நன்றென்றே வேண்டிடுவேன் உம்மை;
உடையொதுங்குங் கண்ணை ஒதுக்கு.

நெஞ்சத்தில் என்வரையில் கொஞ்சமும் துன்பமில்லை;
வஞ்சனை ஏதுமின்றி வந்தவுடன் கூறியதால்
மேலும் உயர்வடைந்து மிக்கோராய் நின்றிட்டீர்;
ஏலுமோ தீயோர்க் கிது?

நம்பிடுவேன் நானும்மை; நம்பிடலாம் என்கூற்றை.
தெம்புடனே நெஞ்சில் தெளிவடைவீர், சென்றிடுவீர்."
என்றுரைத்து நின்ற எழிலொழுகு மார்பினளை
ஒன்றி அணைத்தான் உவந்து.

குன்றொத்த அங்கங்கள் கொஞ்சமும் அச்சமின்றிப்
பொன்றிப் பொருதிடவும் பூவிழிகள் நாணமின்றி
அத்தான் எனவழைத் தாணுதட்டில் சேர்ந்திடவும்
செத்தான் விருப்பால் சிதைந்து.

தெளிவற்ற நெஞ்சினனாய்த் தேன்மொழியைத் தேடி
எளியனென வந்தோன் இடம்பெயர்ந்து போகையிலே
ஆளரி ஒப்ப அசைந்தசைந்து செல்வனெனின்
ஆளுமே நன்னெஞ்சை அன்பு.

# *11. வஞ்சகர் நெஞ்சம்*

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*ஊரிலுள்ள செல்வரெலாம் ஒன்றாய் அந்நாள்*
*ஓரிடத்தில் சேர்ந்திட்டார்; உணரார் மற்றோர்.*
*யாரிடத்தும் தங்குறையை எடுத்துச் சொல்ல*
*எண்ணமவர் கொண்டதில்லை; ஏனோ வென்றால்,*
*பாரறியா வண்ணமவர் பாழும் நெஞ்சில்*
*பகைமறைத்து வாழ்ந்திருந்தார் பழியே வாங்க!*
*சீரறியா அச்செல்வர் செய்கை கண்டால்,*
*சீற்றத்தால் மக்களெல்லாம் சீச்சீ என்பர்.*

*ஏழையர்தம் உடலுழைப்பை இரக்க மற்றே*
*இங்கிவர்கள் கொண்டுதினம் கொழுத்த தையே,*
*வாழையினைச் சாய்ப்பதுபோல் வாய்வீச் சால்தன்*
*வார்த்தைகளால் மாய்த்திட்டான்; மாயஞ் செய்தான்.*
*கோழையென வாழ்ந்தவர்கள் கொள்கை என்றும்*
*கொடுத்ததற்கும் மேலாகக் கூலி கேட்டும்*
*கூழைமையை நீங்கியவர் கூவி ஏவும்*
*குற்றத்தைத் தோற்றுவித்தோன் மாறன் அன்றோ?*

*நெடுமாறன் சேரவன்றோ மக்கள் இன்று*
*நெஞ்சுயர்த்தி நின்றிடுவர் வீரர் ஒப்ப?*
*நெடுமாறன் இவ்வூரில் நிலைக்கா வாறு,*
*நிலைமையினை நாம்சேர்த்து நிகழ்த்தி விட்டால்*
*எடுப்பார்கைப் பிள்ளையராம் ஏழை மக்கள்*
*எதிர்ப்பின்றிச் சொற்படியே எல்லாஞ் செய்வர்.*
*தடுப்பார்யார் நம்மையினித் தரணி தன்னில்?*
*சார்ந்தவர்தாம் இல்லையென்றார்; ஆமாம் என்றார்.*

*“உரையெல்லாம் ஒப்பிட்டோம்; இவனை ஆனால்*
*ஊரைவிட்டு நீக்கிடுதல் எவ்வா றென்றால்,*
*இரையாக இவனுயிரைக் கொள்வ தற்கும்*
*இருக்கின்றார் இவனுடனே ஒன்றாய்ச் சேர்ந்து!*

திரையாக  நாம்சிறிது பணத்தைச் சேர்த்தால்,
   தீர்த்திடுவார் ஓரிரவில்; சொல்வீர்," என்றே
விரைவாக மணியென்பான் விடுத்த கூற்றை,
   வெறுத்தனைவர் ஒருமித்து வேண்டா என்றார்.

சிந்தனையை நாம்முதலாய்க் கொள்ளல் வேண்டும்;
   செய்வதையே பின்திருந்தச் செய்ய வேண்டும்;
எந்தவினை செய்தாலும் யாரும் நம்மை,
   எய்தவரென் றிங்கறிதல் என்றும் தீது.
இந்திதனை, அரக்கிதனை எதிர்க்க மக்கள்
   இருக்கின்றார், அறிந்திடுவீர்; இடையோர் நாளே!
தந்திரமாய் நெடுமாறன் தலைமை தன்னைத்
   தகர்த்திடலாம் அந்நாளில் சரியாய் என்றார்.

## 12. மாலை விரும்பிய மந்தி

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

மணியென்பான் அவ்வூரில் செல்வர் தம்முள்
   மலையொப்பார் அருளாளர் மகனே யாவான்.
பணிவில்லான், யார்மாட்டும் பகையே கொள்ளும்
   பண்பில்லான், தீநெஞ்சான், பதரே சொன்னால்!
இணரொத்த மெல்லியலாள் அல்லி தன்னை
   இனந்தெரிந்த நாள்முதலாய் இணையக் கேட்டும்
இணங்காத கரணியத்தால் பகையே கொண்டன்
   றிருந்திட்டான், வாய்ப்பினையே எதிரே கண்டான்.

நெஞ்சத்தில் வஞ்சனையை நிலையாய்க் கொண்டோன்
   நேரிழையைத் தனிமையிலே அங்கே கண்டான்.
கிஞ்சித்தும் கொள்ளவில்லை ஐயம் நெஞ்சில்!
   கிட்டியது நினைத்ததென்றே மகிழ்ச்சி கொண்டான்.
பிஞ்சொத்த நெஞ்சவல்லி அந்த வேளை
   பிறரறியா வண்ணமங்கு வந்து தங்கி
அஞ்சாது காத்திருக்கும் அருமை தன்னை
   அறிந்திருந்தால் மகிழ்ந்திருக்கான்; அதிர்ச்சி கொள்வான்.

செங்கதிரோன் மேற்றிசையில் சென்று தேயச்
   செந்நிறத்தைக் கொண்டதன்றோ அந்தி வானம்.
திங்களென்னும் மங்கையவள் தென்றல் தன்னைத்
   தேர்ந்தெடுத்து முன்னனுப்பித் திக்குத் தோறும்
மங்கலநன் வரவுதன்னை எடுத்துச் சொல்ல
   மகிழ்வினையும் ஊட்டுமந்த மாலை வேளை.
இங்குமங்கும் புள்ளினங்கள் இல்லம் நாடி
   இன்னொலியைச் சேர்த்திடுமே, இன்பம் கோடி.

பூமலரைக் கண்டமணி புத்தி கெட்டுப்
   புலம்பிட்டான் என்றேதான் சொல்ல வேண்டும்.
காமமெனும் பொய்மாயை கண்ணை யன்றிக்
   கருத்தினையும் மறைத்திடவே எண்ணி யாயான்!
தேமலுடை எழில்மார்பின் திரட்சி தம்மைத்
   திகட்டாது சேர்ந்தடைந்து மகிழ்வில் ஆழ
ஏமமுற்ற நெஞ்சினனாய் எதிரில் வந்தே
   எழிலுருவாள் அல்லியிடம் மொழிவான், வீணே!

“தித்திக்கும் தேனமுதே, திருவே, முத்தே,
   தீங்கரும்பின் நறுஞ்சாறே, தெளிந்த ஊற்றே,
எத்திக்கும் போற்றுகின்ற எழிலே, வாழ்வே,
   எஞ்ஞான்றும் இனிக்கின்ற இம்மைப் பேறே,
பத்தெட்டும் முடியாத பருவப் பாங்கே,
   பஞ்சணைக்கும் மென்மைதரும் பளிங்கே, பாலே,
எத்தன்தான்; இருந்தென்ன? இரக்கம் கொண்டே
   இன்றென்னை அணைத்திடுவாய்; இன்பஞ் சேர்ப்பாய்.

தயக்கமிங்குக் கொள்வதென்ன? தளிரே, சொல்வாய்.
   தவங்கிடந்த அடியவனுக் கருளைச் சேர்க்கப்
பயமெதற்கு? பக்கம்வா; பருவ உள்ளம்
   பழகுதற்குத் தடையேது? பாசம் கொள்வாய்.
இயல்பிதுவோ? எந்நாளும் என்னை நீங்கி
   இருப்பதையும் பொறுப்பதுண்டோ? எழிலே, சேர்வாய்.
மயக்கிடுவாய் உன்னழகால்; மயக்கம் நீங்க
   மார்போடு சேர்த்தணைப்பாய்; இன்பம் சேர்ப்பாய்.

குறையென்ன என்னிடத்துக் கொண்டாய் நீயும்?
   கொல்லுமடி நன்னெஞ்சைக் கொடிய ஆசை!
பிறையொத்த நெற்றியொன்றே வெற்றி கொள்ளும்;
   பின்னெதற்கு மற்றவைகள்? பெண்ணே, சொல்வாய்.
மறைத்தாலும் வெளிப்படவே துடிக்கும் மார்பும்,
   மலரிதழும், மணிமிடறும், மற்ற யாவும்
சிறைசெய்தென் இன்வாழ்வைச் சிதைத்த போதும்
   சிரிக்கின்ற உன்செயலில் சிறப்பும் உண்டோ?

பணத்திற்கும் என்னிடத்தில் பாசம் உண்டு!
பாவையுனக் கென்னிடத்தோ பரிவும் இல்லை.
குணக்கொடியே நீயென்னை மணப்பாய் என்றால்
குவிந்துள்ள செல்வமெலாம் உனையே சேரும்.
மணந்திடவும் மறுக்காதே! மறுத்தால் நீயும்
வாழ்விழப்பாய்; வளமிழப்பாய்; முடிவில் ஊரார்
குணமிழந்த வேசியென்றும், கொடியள் என்றும்
கூசாமல் உனைத்தூற்ற வகையும் செய்வேன்.

எனையெதிர்த்தார் இவ்வூரில் என்றும் யாரும்
இடரின்றி வாழ்ந்ததில்லை; அறிவாய் நீயும்.
நினைவிருக்கும் முன்னொருநாள் நிகழ்ச்சி தன்னை!
நிந்தித்தான் எனைக்கோபால் என்ற தாலே

நினைவிழக்கச் செய்திட்டேன் அடுத்த நாளே.
நிச்சயமாய் நான்நினைத்தால் நிகழ்ந்தே தீரும்.
உனையணைப்பேன்; உடல்கலப்பேன்; இன்பங் கொள்வேன்.
உணர்ந்திடுவாய்; ஒன்றிடுவாய்; மகிழ்வுங் கொள்வாய்."

"அகன்றிடுவாய் இங்கிருந்தே!" அல்லி சொன்னாள்;
"அதுமட்டும் நடக்காது"(எ)ன் றருகே வந்தான்.
"இகழ்ந்திடவே செய்யாதே; என்னைத் தொட்டால்
இற்றிடுமே உன் தலைதான்" எனவும் அல்லி,
அகடலைய நகைத்திட்டான்; அடுத்துப் பின்னே
"அடுக்காதே பத்தினிபோல்! அஞ்சேன்" என்றே
தகைவுடைய தளிருடலாள் கையைப் பற்றத்
தடுமாறிக் கீழ்வீழ்ந்தான்; அருகே அங்கே,

கண்ணெதிரில் மாறனையே கண்ட தாலே,
கண்டிட்ட கோபமுமே கொஞ்ச மன்று;
சுண்டிவிட்ட காசொப்பத் துடித்தெ ழுந்தே
சுட்டிட்டான் இருவரையும் கண்கள் தம்மால்!
அண்டமெலாம் நடுநடுங்க அசுரர் ஆங்கே
அந்தணர்பொய்ப் புராணங்கள் அமைவாய்த் தம்முள்
விண்டுரைக்கும் சிரிப்பொப்ப வெடித்தான்; மற்றும்
வெஞ்சினத்தில் வார்த்தைகளை விடுப்பான் தேடி!

"நெடுமாறா, என்செயலைத் தடுத்தாய் நீயே!
நிகழ்ந்திடப்போம் உன்முடிவைத் தடுப்பார் யாரே?
கொடுவேலன் மரமேறித் தேனார் கூட்டைக்
கொண்டிடப்போம் வேளையிலே குறுக்கிட் டாயே!

நெடுநாளாய் நானெண்ணி வளர்த்த ஆசை
நிமிடத்தில் தகர்ந்திடவே நீயே செய்தாய்.
அடிபட்ட நாயடாநான்! அதனால் இப்போ
தகன்றிடுவாய்; உயிர்வாழ்வாய்; இல்லை, சாவாய்!

உள்ளமுறை ஆசைகளை உனக்குச் சொல்வேன்;
உணர்வறிந்த நாளன்றே உள்ளந் தன்னில்
துள்ளிவரும் வேலெனவே தொத்திக் கொண்டு
துயரற்ற என்வாழ்வில் தொல்லை கூட்டிக்
கள்ளமற்றுச் சிரித்திடுவாள் இந்தக் கள்ளி!
கனவென்றே ஆசைகளைக் கருத வைத்தாள்.
கொள்ளைகொள்ளும் பேரழகின் கோயில் தன்னில்
குடியேற அடிவைத்தேன்; குறுக்கிட்டாயே!

எத்தன்தான்; இருந்துமென்ன? இதுநாள் மட்டும்
எழிலொழுகும் விழியினளை இரந்து கேட்டும்
மொத்தத்தில் முடிவதுவோ மோசம்! மோசம்!
முடியாதாம்; மறுக்கின்றாள் மனைவி யாக.
தித்திக்கும் செங்கரும்பைத் தேனைப் பாலைச்
செந்தமிழின் மொழியுணர்வைச், சேலாம் வேலை
மொத்தத்தில் இவளிடத்தே முதலில் கண்டேன்;
முடிந்திடுமோ என்வாழ்வும் இவளால் அன்றி?

பணமீந்தால் பசிதீர்க்கப் பலரி ருந்தும்
பழகுதற்கிங் கிவளொப்பார் பாரில் உண்டோ?
குணமற்ற வேசியரின் கொஞ்சும் பேச்சில்
குறைவில்லை என்றிடினும் நிறைவும் உண்டோ?
மணங்கூட்டி மகிழ்வூட்டும் மலரை விட்டு
மக்களென்றும் நாடுவரோ வாழைப் பூவை?
இணரொத்த இவளையன்றி யாரை நெஞ்சம்
இணையென்று விழைந்துலகில் இன்பங் கொள்ளும்?

வேகிடும்தீ நெஞ்சினனாய் வெறுத்து இன்று
போகின்றேன்; என்றாலும், பொறுப்ப தில்லை.
கோகிலமே உன்னால்நான் கொடுமை யுற்றுக்
கொதிப்புற்றுத் துடித்திடுவேன்; அறிவாய் நீயும்.
ஆகுமட்டும், உயிருடலை நீங்கு மட்டும்
அயர்வின்றிக் காத்திருப்பேன் அல்லல் சேர்க்க.
ஏகிடுவேன், என்நினைவே என்றும் உன்னை
இணைந்திருக்கும்; உணர்ந்திடுவாய்” என்றான்; சென்றான்.

குன்றொத்த தோள்களுமே குறுகிக் கூம்பக்
கொல்லேற்றின் கோபமுடன் செல்வான் தன்னைத்
தென்றல்செல் பூஞ்சோலைச் செறிவில் நின்ற
தென்னவனும் பூமகளும் சிற்ப மொக்க
நன்றாமோ என்றெண்ணிக் கண்டி ருந்தார்;
நகர்ந்ததுவே காலமும்தான் நகைத்த வண்ணம்.
ஒன்றிட்ட ஈருடலும் பிரிந்து காண
ஓவென்றே ஒலியெழுப்பும் வாடைக் காற்றும்.

நிலவொளிந்த மலர்முகத்தில் நிழலைக் கண்டு
நெடுமாறன் நகர்ந்திட்டான் அல்லி பக்கம்.
“இலவுகந்த கிளியொப்ப ஏங்கி வாடி
ஏகிட்டான், வருத்தந்தான்; இருந்தும், உன்னில்
கலக்கமதைக் காண்கின்றேன்; கண்ணே உண்மை
கழறிடுதல் நன்று”(எ)ன்றான்; கமலம் அன்னாள்
கலகலப்பாய்ச் சிரித்திட்டாள்; “அச்சங் கொள்ளக்
காரணமும் இல்லை”யென்றாள்; களிப்புக் கொண்டான்.

அல்லி:

“எத்தன்தான் மணிதன்னை வெறுத்த போதும்
என்னுள்ளம் அவரிடத்தே இழுத்துச் செல்லும்.
கத்துங்கீழ் நெஞ்சம்தான்; காதல் என்றும்
கனவினிலும் அவரிடத்துக் கண்ட தில்லை.
தித்திக்கும் காதலென்பார்! தேனே என்பார்!
தீயாகக் காண்கின்றேன்; தீதோ? யாதோ?
எத்திக்கும் போற்றுகின்ற காதல் வாழ்வை
எதிர்த்திடுமே என்னுள்ளம்; ஏனோ? சொல்வீர்.”

நெடுமாறன்:

“சொல்லில்தான் என்னவுண்டு? சொல்வ தென்றால்
சூதாட்டம் காதலென்பேன்; வேறும் உண்டோ?
எல்லாரும் காதலிப்பார்; இருந்தும் வாழ்வில்
ஏமாற்றப் படுபவரே மிகுதி ஆகும்.
இல்லாதார் காதலித்தால், ஐயோ பாவம்!
இருப்பவர்க்கோ நாளுமது பொழுது போக்கு.
நல்லாரிங் கேற்பதில்லை காதல் வாழ்வை.
நகைத்திடுவாய்; ஆராய்ந்தால், நாமே சாட்சி.”

அல்லி:

“நம்மிடையே காதலா?உம்! நல்ல கூற்று!
நகைப்பிற்கே இடமாகும் வெளியே சொன்னால்.

செம்மையற்ற நம்நெஞ்சில் காதல் எங்கே
   செழிப்படைந்து தினம்வளர்ந்து சிறப்பும் கொள்ளும்?
நம்மைநாம் மறந்திடவே நாட்ட மின்றி
   நடந்திட்டோம்; உடல்கலந்தோம்; நஞ்சாய் இன்று
நம்மைநாம் வெறுத்திடுவோம்! நகைக்க வேண்டா.
   நகர்ந்தேநீர் அமர்ந்திடுக, நல்ல தில்லை.

மணியைநான் போற்றிடுவேன்; மாறாய் உம்மை
   மனமாறத் தூற்றிடுவேன்; வாழ்த்தேன் என்றும்.
தணியாத காதலினை என்மேல் கொண்டு
   தளராது பலவாண்டாய் என்னைச் சுற்றி
மணம்பேசி வேண்டிட்டார்; மறுத்த போதே
   மாறிட்டார் வஞ்சகராய்க் காதல் தன்னால்!
இணரொத்த என்தோழி இருக்க வாங்கே
   எனையிங்கே நாடிடுவீர்; இதுவோ காதல்?

காதலென்றால் உடலின்பம் காண்ப தென்றே
   கருதிடுவீர்; உண்மையிது; செய்கை காட்டும்.
வேதனையால் நான்துடிப்பேன் விதியை யெண்ணி;
   வெட்கமின்றி உடல்தழுவி இன்பம் என்பீர்.
ஏதுமிலை? இஃதென்ன? சீச்சீ! எச்சில்!
   இப்படியும் முத்தமிட எங்குக் கற்றீர்?
போதுமிவண், விட்டிடுவீர்; போச்சு! போச்சு!
   பொன்னான ஆடையையுங் கிழித்திட் டீரே!

ஏனுமக்கிவ் அவசரமோ? இதற்கும் முன்பே
   என்னுடலைத் தொட்டதுண்டே! இருந்தும் இன்று
தேனிலவின் பாலொளியில் சிந்தை கெட்டோ
   தேடியுடல் கையாயும் செய்கை செய்வீர்?
நாணமிலாள் இவளென்றோ எண்ணங் கொண்டீர்?
   நல்லதில்லை இச்செய்கை! நஞ்சாய்க் கொள்வீர்.
மானமில்லாப் பெண்ணானேன்; இல்லை என்றால்,
   மகிழ்ந்திடுமோ என்நெஞ்சம் மாறாய் இங்கு?

கொண்டிட்டீர் பெண்மையினைக் கொண்ட தாலே
   கொதித்தெழுந்து மைக்கொல்லாக் கொடியள் ஆனேன்.
கண்டிட்டே உடலின்பம் மீண்டும், மீண்டும்,
   கருத்தற்ற என்னுணர்வும் களித்துத் துள்ளும்.
விண்டிட்டால் ஊர்தூற்றும், வெட்கம்! வெட்கம்!
   வேசியென்பார், தாசியென்பார்; மேன்மை யற்ற
பெண்ணென்பார்; பண்பிழந்த பேதை என்பார்;
   என்னென்பேன்? எனக்கமைந்த வாழ்க்கை ஈதோ?”

*நெடுமாறன்:*

*"என்னுயிரே, நன்மருந்தே, இனிக்குந் தேனே,*
*ஏனிந்த வேதனையோ? என்ன தீதோ?*
*தென்னவர்தம் குலக்கொடியே, தெரிந்தோ, மற்றோ*
*தீதுன்னைத் தேடிவராச் செய்கை செய்வேன்.*
*இன்றிருந்தே என்றும்நீ உள்ளத் தேட்டில்*
*எழிற்றமிழாய் நிறைந்திருப்பாய்; இன்பம் சேர்ப்பாய்.*
*நன்றெனவே இன்றென்னை நம்ப வேண்டா;*
*நடக்கட்டும் நம்மணமே, பிறகு சொல்வாய்.*

*இல்லையென்று மறுக்கவில்லை இன்றும் நானே;*
*இருந்திட்டாள்; இருந்திடுவாள் இனியும் நெஞ்சில்*
*தில்லையெனும் உன்தோழி, தெய்வம் ஒப்பாள்*
*தெரிந்திட்டும் நம்முறவை வெறுத்தாள் இல்லை.*
*நல்லதில்லை என்றுமவள் சொல்ல வில்லை;*
*நகைத்திடவும் செய்யவில்லை; நாணம் போக்கி,*
*"இல்லமதில் கொண்டிடுவீர் அல்லி தன்னை,*
*இடையேநான் வந்தடைவேன்" என்றே சொன்னாள்.*

*மணந்துகொளச் சம்மதமா? மானே, தேனே!*
*வாய்மலர்ந்து மொழிந்திடுவாய்; மகிழ்ச்சி சேர்ப்பாய்.*
*குணக்கொடியே, உனையடைந்த கொடியன், வேண்டாக்*
*குணமுடையன் என்றாலும் கொள்வாய் நெஞ்சம்.*
*இணங்கிடநீ என்வாழ்வில் இன்பம் சேரும்;*
*இல்லையோ உன்கால்கள் எனக்குத் தஞ்சம்!*
*மணமளித்து மகிழ்விக்கும் மலரே, அல்லி,*
*வாட்டுதடி இளந்தென்றல், வலிந்து சேர்வாய்"*

*அல்லி:*

*"கால்களில்நீர் முகம்புதைத்துக் கருணை வேண்டும்*
*கண்ணியத்தைக் கண்டிட்டேன்; விடுவீர் காலை.*
*நால்வகையாம் குணங்களிலே அனைத்தும் நீங்கி*
*நானும்மை சேர்ந்தபின்பும் நஞ்சாய் உம்மைச்*
*சேல்விழிகள் நோக்கிடுமோ? சேர்ந்த ணைத்துத்*
*தேனிதழ்கள் உடல்பதியும் செய்கை செய்தால்*
*வேல்விழிகள் வெறுத்திடத்தாம் கூடுமோ? மற்று*
*வேறென்ன நாயகரே விரும்பக் கூடும்?"*

*(நேரிசை வெண்பா)*

*கட்டான அல்லியுடல் கைக்குள் அடங்காமல்*
*பட்டாய் விளங்கினவே பாலொளியில் — மட்டிலா*
*வேட்கைப் பெருக்கால் மிருக மெனமாறன்*
*தாழகற்றப் பார்ப்பான் தனித்து.*

உடலூருங் கையால் உணர்வலைகள் பொங்க
அடலே றனையான் அணைப்பில் — மடமாது
தூங்குமுலை வாடத் துவண்டு நெளிந்திடுவாள்
தீங்கறியாள் தேனில் திளைத்து.

நாவொடு நாவிணைய நாணமின்றிக் கைகளுமே
ஆவலோ டாடை அகற்றிடவும் — பூவணையாள்
கண்கள் சிவந்ததையே கண்டிருந்த கானிலவு
விண்டுரைத்தல் ஆகுமோ? வீண்.

மல்லர் இருவர் மரத்தடியில் மேடையிட்டு
வல்லர்யார் என்று வரையறுக்க — மல்லிட்டார்
ஒப்ப இருவுடலும் ஒன்றினில் ஒன்றடவும்
இப்புவி நோக்கா இனிது.

செப்பு மலரடியாள், செம்பவளத் தேனிதழாள்
ஒப்பரிய காதல் உருவினாள் — பொற்புடைய
அல்லியிடங் கொண்ட அளப்பரிய இன்பத்திற்
கில்லை உலகில் எதிர்.

## 13. விழிப்புற்ற மக்களும் மொழிப்பற்றும்

(இன்னிசைக் கலிவெண்பா)

சேவல் எழுமுன்னர்ச் சேல்விழி மாதரார்
ஆவல் அடங்கி அயர்ந்தணைந் தாளனொடு
கண்மூடு முன்னேயக் காரிருளில் வீதியெலாம்
எண்ணற்ற மாணவர்கள் எண்ணத்தில் கள்ளமின்றிக்
குட்டிச் சுவரென்றும் கோல மதிலென்றும்
வெட்டிக் குடிலென்றும் மேலாளர் வீடென்றும்
காரென்றும் ஏழையர்தம் கைவண்டி ஈதென்றும்
ஊரெல்லாம் ஓடி ஒழிவின்றி அங்கெங்கும்
மைகொண்டும் தார்கொண்டும் மற்றுப் பலகொண்டும்

கைகண்ட வண்ணம் கருத்தில் ஒருமித்து,
வாழ்க தமிழென்றும் வளர்க தமிழென்றும்
வீழ்க வடவர் வெறியாட்டம் என்றும்
“உயிரோ தமிழுக் குடலோமண் ணிற்கே!
உயிரேன் தமிழுக்கின் றுற்ற துயர்துடைக்க
ஆகாத போதே? அடடா! அழகற்ற
ஆகாத இந்திக் கரசாமோ? ஆண்டாண்டாய்ச்
செங்கோல் பலகண்ட செந்தமிழ் கீழாமோ?
செங்குருதி சிந்தியும் செந்தமிழைக் காப்போம்!
உரிமை இழந்தும் உயிரோ பெரிதாம்?
அருமைத் தமிழரே ஆர்த்திங் கெழுவீர்!
தரங்கெட்ட இந்திக்குத் தாலாட்டா? தாவும்
குரங்கெனவே ஆடுகின்றார் கோலோச்சும் கீழோர்;
பதவி பெரிதவர்க்குப் பண்புபெரி தில்லை!
இதயமிலார் நம்மவரே என்றாலும் இங்குத்
தமிழினைக் காக்கத் தயங்கிடுந் தன்மை
உமிழத் தகுந்ததே! ஒத்த தறியாத்
தருக்கர் அமைப்பில் தமிழ்த்தாய் அழிவாள்;
இருக்கல் சரியோ இதனை யுணர்ந்தும்?
எழுவீர் இளைஞரே! பொங்கி எழுவீர்!
பழுதுடை ஆட்சியில் பண்பிலர் இட்ட
அரசியல் சட்டம் அடிபட, நீங்க,
உரிமைக் குரலினை ஓங்கி உயர்த்துவோம்!”
என்றே பலவும் எழுதினர் எவ்விடத்தும்!
என்றும்போல் அன்றும் எழுந்த கதிரோன்,
கொடியோர் தமையொடுக்கக் கூர்வாட்கைக் கொண்டு
துடித்தெழுந்த சோவியத்துத் தோழருடை வாழ்க்கையிலும்
என்றுமுன் காணா எழுச்சியதன் ஏற்றத்தை
அன்றே அறிந்தான் அவண்.

## 14. மொழியா? விழியா?

*(நேரிசை வெண்பா)*

சுற்றித் திரிந்தன்று சோர்ந்திருந்த மக்களினம்
வெற்றி நடைபோடும் வேடிக்கை — உற்றதெதால்?
சொந்தமொழி யால்வெற்றி சூழ்ந்ததுவும் அல்லாமல்
விந்தையெதும் உண்டோ? விளம்பு.

செழித்திடும் நாட்டைச் சிதைத்திட வேட்போர்
அழித்திடப் பார்ப்பர் அவர்தம் — மொழியே!
மொழியை இழந்தார், விழியை இழந்தார்;
எழுந்திடல் உண்டாமோ இங்கு?

கண்ணிழந்தும் வாழ்ந்திடலாம்; காலிழந்தும் சென்றிடலாம்;
பொன்னிழந்தும் இங்குப் பொலிந்திடலாம்! — மண்ணில்
மொழியிழந்தார் சோர்ந்து முடிவிலவர் வெட்கி
இழிந்திடுதல் என்றும் இயல்பு.

என்மொழி வாழ்ந்திட எண்ணிடல் தீதென
இன்னும் உரைப்பார் இருப்பாரேல் — நன்றதோ?
தாயடி போற்றல் தவறெனக் கூறுவர்
வாயடிச் சொற்களே; வம்பு!

அன்னை மொழியே அனைத்துமாம் என்றேதம்
இன்னுயிர் ஈவார்; இயற்கையோ? — என்பவர்
யாரும் உலகில் இருப்பதுந் தீதவர்
சேரும் உலகமோ வேறு.

வாய்மை வழிநின்று வாழ்வின் பொருளுணர்ந்
தாய்ந்தறிந்தே செய்வர் அனைத்துமெனின் — வாய்த்த
மொழிப்பற்றே மக்களிடம் மூண்டிருக்கும் கொள்கை
விழிப்பிற் கமைந்திட்ட வித்து.

தாய்மொழிப் பற்றால் தளர்ந்திடும் வாழ்வெனும்
நாய்மொழி ஏற்றல் நலமாமோ? — ஆய்ந்திடின்
தோன்றிமறை செம்மென் சுவரெனச் சொல்லலாம்;
ஏனவர் வாழ்வதும் இங்கு?

*பிறமொழி மூலம் அறிவியல் கற்றே*
*வறியவர் ஆனோம் வாழ்வில்! — நெறிமுறை*
*சிந்தனை ஆற்றலைச் சீர்செய வல்லது*
*சுந்தரத் தாய்மொழியே; சூடு.*

*பிறமொழி கற்றல் பிழையெனச் சொல்லோம்;*
*அறமுமன் றவ்வா றுரைத்தல்; — உறவில்*
*உலகத்தோ டொட்டி உறைந்து மகிழச்*
*சிலமொழி தேர்தல் சிறப்பு.*

*பெற்று வளர்த்த பெருந்தாய் புகட்டிய*
*நற்றமிழ் மட்டுமே நம்மொழி — மற்றவை*
*செல்லும் வழியிடைச் சேரும் துணைவர்போல்*
*நில்லா நெடுநாள் நிலைத்து.*

*என்தாய் மொழியொன்றே எல்லாம் எனக்கென்று*
*சொன்னால் அதிலேதுஞ் சூதுண்டோ? — அன்பில்*
*பெறுமவற்றுள் யாம்பெற்ற பேறாம் தமிழின்*
*உறவுக்கும் வந்ததே ஊறு.*

*ஏற்றம் உடையதாம் எம்மொழி என்றெவரும்*
*போற்றிப் புகழ்ந்தால் பொறுப்பதுண்மை — ஏற்றுநீர்*
*கற்பீர் அதையெனக் கூறுங் கடைமனம்*
*அற்பற் கமைந்த அழகு.*

*இம்மொழி பேசுவர் எண்ணிலர் என்றுரைத்*
*தம்மொழி காக்கவே ஆர்த்தெழுவர் — நம்மொழிக்கோ*
*சட்டம் இயற்றிச் சவக்குழி தோண்டுவர்*
*இட்டார் பிரிவுக் கினிப்பு.*

*இத்திரு நாட்டிடை ஏனித் தனைமொழிகள்?*
*அத்தனை வாழ்தல் அழிவென்றே — செத்த*
*ஒருமொழி போற்றும் திருந்தா வரசிங்*
*கிருத்தலின் இல்லாமை நன்று.*

*செத்த மொழிகொண்டு செந்தமிழின் சீரழிக்கப்*
*பித்தந் தலைக்கேறிப் பேசுகின்றார் — ஒத்த*
*நெறியற்றார் செய்கையே நீதியென்றால், கெட்ட*
*வெறிநாயின் வாழ்வும் சரி.*

# *15. ஆட்சியாளரின் அறிவற்ற போக்கு*

*(இன்னிசைக் கலிவெண்பா)*

*புற்றீசல் போலப் புறப்பட்ட மாணவர்கள்*
*சுற்றி வலம்வந்தார் வெற்றி முழக்கமொடு!*
*எப்பக்கம் நோக்கினும் எங்கும் அவர்கூட்டம்,*
*ஒப்புவமை இன்றி உணர்வு பெருக்கெடுக்கத்*
*தமிழ்காக்கச் சென்றதுவே தன்னலத்தை வென்று.*
*குமுறி எழுந்திட்ட கூட்டத்தைக் கண்டும்*
*உணர்ந்திட்டார் இல்லை உயரத்தில் வாழ்ந்தோர்!*
*இணரெரி தீக்கினும் இட்டார் பெருந்தீனி!*
*ஏட்டில் வடித்தெழுதல் யார்க்கும் எளிதன்று;*
*நாட்டில் நடந்தவற்றில் நாலைந்து மட்டே*
*எடுத்துரைப்போம் இவ்விடத் தேதுமிடை யின்றி.*
*அடுத்தடுத்து மாணவர்தம் ஆர்ப்பாட்டம் நீண்டதுவே;*
*இன்னுயிரைத் தீயில் இழந்திட்டோர் ஏராளம்!*
*தன்னுயிரைத் தந்து தமிழ்காக்கச் செத்தோரைப்*
*போற்றிட்டார் எல்லாரும்; புல்லறி வாளரோ*
*தூற்றிட்டார்! "செத்தோர் தொலையாத சூலையினால்*
*தற்கொலையே செய்துகொள்ளத் தப்பிதமாய்ச் செந்தமிழ்க்*
*கற்பணித்தார் என்பதோ ஆருயிரை?" என்றுரைத்துக்*
*கேலி புரிந்திட்டார் கிஞ்சித்தும் வெட்கமின்றி!*
*தாலி இழந்து தவிக்கின்ற பெண்களுக்*
*காறுதல் கூறவில்லை ஆட்சியில் வீற்றிருந்தார்.*
*கூறினார் ஏதேதோ கொஞ்சமும் அச்சமின்றி!*
*வீதியில் செல்பவரை வெட்டி முடிப்பதற்குப்*
*போதைக் கடியவராம் புல்லரை அங்கெங்கும்*
*ஏற்பாடு செய்திருந்தார் எல்லாம் உடையவர்தாம்;*
*கூற்றுவன் கேட்டானாம் கூலி அவரிடத்து!*
*வாழ்கதமி ழென்று வலம்வந்த மாணவர்தாம்*
*ஊழ்வே றுருவுடன் வாழ்ந்திருக்கக் காணாரே.*
*கல்லெறியும் கண்ணாடி காலணி வீச்சுமுடன்*
*சொல்லடியும் மற்றுச் சுடுமொழியும் உண்ட*
*குருத்துக்கள் மேலும் பொறுப்பதறி யாது*
*திரும்பிய போதளவில் தீயவரைத் தாக்கிட்ட!*
*காவலரும் மேலிடத்துக் கட்டளையைத் தட்டாமல்,*

ஏவிட்ட வண்ணம் இயங்கிட்டார் கட்டைகளாய்!
ஓடி மறைந்தாலும் தேடிப் பிடித்தவரை
நாடி துடித்தழுவ நையப் புடைத்தனரே!
கையில் விலங்கிட்டுக் கண்ணியம் ஏதுமின்றிச்
செய்யாத செய்தார்கள் சிற்றறிவுக் குற்றபடி.
கல்லூரி உண்ணுழைந்த காவலர்கள், எல்லைக்குள்
நில்லா தனைவரையும் நிற்கவைத் தாட்டினரே!
மக்களுந் துன்புற்ற மாணவரும் ஆர்த்தெழுந்து
பக்குவம்கை விட்டுப் பழிவாங்கச் சேர்ந்ததனால்
கட்டுக் கடங்காக் கலவரங்கள் மூண்டனவே.
தட்டி யறியாத் தலைவர்தம் பேச்சினையும்
மீறி நடந்ததுவும் மேதினியில் அன்றுமட்டே!
கூறி முடியாக் கொடுமைக்குத் தாயகமும்
தாட்பணிந் தஞ்சித் தளர்வுற்று வாடியதே.
நாட்பல சென்றும் நடந்திட்ட போராட்டம்
ஓயவில்லை; தானாக நின்றடங்கி ஓய்வதற்கும்
ஆயத்தம் செய்தாரில் ஆட்சிப் பொறுப்பிருந்தார்!
நாட்டின் உடைமைகளாம் நல்லபுகை வண்டிகள்,
பாட்டையில் உந்திப் பறக்குமகிழ் வண்டிகள்,
கட்டடங்கள், காவல் நிலையங்கள், காட்டரசுக்
கட்டிலில் வீற்றிரு கட்சியினர் இல்லங்கள்
கெட்டொழிய மாணவர் கேடுபல செய்திட்டார்.
நட்ட நடுநிசியும் நாளும் அவர்க்கொன்றே!
கண்ணீர்ப் புகைக்கஞ்சாக் காளையரின் செந்நீரம்
மண்ணில் சிதறிட்டும் மாணவர் நிற்கவில்லை;
துப்பாக்கிக் குண்டு துளைத்திட மார்பகத்தை
அப்பாவி மக்களும் அஞ்சாது காட்டினரே.
செத்தவர் எண்ணிக்கை எத்தனையோ? யாரறிவார்?
அத்தனையும் மூடிட்டார்; ஐந்தா றெனவுரைத்தார்.
பட்டது போதாதாம்; பட்டாளம் கொண்டுவந்தார்.
குட்டிச் சுவராக்கக் கொண்டிட்ட தெண்ணமாகும்!
ஆர்த்தெழுந்த மக்களும் ஆறறிவை நீங்கியதால்,
தீர்த்து முடித்தார்கள் தெய்வமென நீதியைக்
காக்குந் தொழிலுடை காவலர்கள் பல்லோரில்
தாக்குமனங் கொண்ட தரமற்ற கீழோரை!
தீயிட்டுக் கொன்றிட்டார்! தீயவரே என்றாலும்
நாயொப்பக் கல்லால் நடுத்தெருவில் ஓட்டி
அடித்துத் துரத்தி, அவரைத் தொடர்ந்து
பிடித்து நிறுத்திப்பின் பித்தராய் அன்னார்மேல்
எண்ணெய்யை ஊற்றி எரியூட்டிக் கொன்றிட்ட
பண்பிலாச் செய்கையினைப் பாலகரும் ஏற்கார்.
இருபதாம் நூற்றாண்டில் இப்படியும்; ஐயோ!
பொருந்துமோ மக்கள் புகழுக் கிதுவே?

சிறையில் அடைபட்ட செம்மல்கள் அன்று,
குறைந்ததோர் ஆயிரம்! கூற்றுவனால் வாழ்க்கை
இழந்தவர் எண்ணிக்கை யாரும் அறியார்.
அழகு தமிழ்காக்க அல்லல் அடைந்தோரைத்
தாயிங்குச் சேயைத் தவறி மறந்தாலும்
தூய மனமுடையார் துஞ்சுகின்ற வேளையிலும்
கூற்றுவனின் தோற்றத்தில் கொஞ்சமும் அஞ்சிடாது
போற்றி யுரைப்பார் புகழ்ந்து.

## 16. மறைவில் விருந்து

(நேரிசை வெண்பா)

மாணவரை அவ்வூரில் மாறனே தூண்டியதாய்
வீணர் உரைகேட்டு மேலவர்கள் — ஆணவத்தில்
கோடி கொடுத்தாலும் கொள்கை திரியானைத்
தேடினார் எங்குந் திரிந்து.

திரிந்தலைந் தூரெங்குந் தேடியுங் காணற்
கரியனை, அன்பருளத் தோனைக் — கருத்தில்
உறுதியுடை காவலரோ டூனமுற்ற செல்வர்
அறுதியிட்டுத் தேடுவர் ஆங்கு.

இறுதிவந் தெய்தாலும் இன்முகத் தோடேற்கும்
உறுதி படைத்திட்டோன் உள்ளம் — சிறுமதியார்
எண்ணம் உணர்ந்ததனால் என்றும் சிறைசேரல்
திண்ணமெனக் கொண்டான் தெளிவு.

அல்லி தனியிடத் தன்றாடம் சந்தித்துச்
சொல்லி இயலாச் சுகத்தினையே — எல்லையின்றிச்
சேர்த்துவந்தாள் ஆனதினால் சேரும் பிரிவெண்ணிச்
சோர்ந்திட்டான் மாறன் துவண்டு.

துவண்டு நெளிந்துருகத் தோகைமயில் அல்லி,
அவல நிலையெண்ணி அஞ்சிக் — கவலை
மனதாட்டக் கானில் மறைந்துறைவான் மார்பில்
தனதாட்டங் கொண்டாள் தழைத்து.

அழகோ டசைந்திட்ட அல்லிவிழி நோக்கிப்
"பழுதறியா இன்னமுதே, பாவே, — விழிமலர்கள்
வேதனையுங் கொண்டிடுமோ சோதனையுஞ் சேர்ந்தக்கால்?
தீதிலா இன்முகத்தாய், செப்பு."

"ஆதவனை மேகம் அணுப்பொழுது சூழ்ந்தாலும்
கோதறு தாமரை கோணுமே — சூதறியா
நெஞ்சில் நிறைந்திட்ட நேசர் உமைப்பிரிந்தால்
எஞ்சுமோ இன்பம் எனக்கு.

ஆனாலும் இன்றஞ்சேன்; அஃதேன் எனக்கேட்டால்
தேனாரும் செந்தமிழ்க் குற்றதீதை — வானோக்காய்ப்
போக்க முயன்றதனால் போவீர் சிறையென்றால்
தாக்குமோ நெஞ்சைத் தவிப்பு?"

"நன்றுரைத்தாய் கண்ணே, நகைத்திடுவேன் நானினியே;
இன்னிருந்து மூன்றாம்நாள் யாமத்தில் — குன்றெறிந்தோன்
கோயிலுக்கு வந்தென்னைக் கொண்டிடுவாய் வாழ்துணையாய்;
ஆயிழையே இப்போ தணை."

## 17. கொட்டியது மேளம்

(நேரிசை வெண்பா)

இரவுமணி அப்போ திரண்டிருக்கும்; நாலைந்
துருவங்கள் ஓடோடி வந்து — முருகன்தன்
ஆலயத்தைக் கழுவி அணிவிளக்கை ஏற்றிப்பின்
கோலங்கள் செய்த குனிந்து.

ஒப்பனை ஏதுமின்றி ஓவியப் பாவையெனத்
தெப்பம்போல் தில்லைவந்தாள்; பின்றொடர்ந்து — தப்பேதோ
செய்துவிட்ட தொப்பத் தயக்கமுடன் தேர்குலுங்க
மொய்குழலாள் வந்தாள் முடித்து.

அல்லியினைக் கண்டவுடன் ஆசைப் பெருக்கோடு
தில்லை எதிர்வந்து சேர்ந்தணைந் — தில்லாதாள்
பேரெழிலாம் ஒருருவைப் பெற்றெடுத் தாளன்ன
நீரொழுக நின்றாள் நெகிழ்ந்து.

கண்களோ நீருகுக்கக் கட்டி யணைத்தவண்ணம்
எண்ணம் அலைய இருப்பாளைப் — பண்ணின்
மொழியான பாகத்தாள் முல்லைமலர் அல்லி
விழியாள் அணைப்பாள் வியந்து.

அல்லி :

"உனக்கே உரியவரை, உன்னுயிரை, நானே
எனக்காக்கிக் கொண்டேன்; இருந்தும் — மனமுவந்து
வாழ்த்துரைக்க வந்தாய்நல் வள்ளலென; ஆனதினால்
ஏழ்பிறப்பும் நீயே இறை."

தில்லை :

"அல்லிவுயிர்த் தோழி, அவசரம்நீ கொள்ளற்க;
இல்லாத கூறி இறையென்றே — ஒல்லும்
உரிமைக்கோ ஊறுசெய்வாய்? ஊடென் னுயிர்க்கும்
உரியவரே மாறன், உணர்."

அல்லி :

"நீயிட்ட பிச்சையிது; நிற்பேனோ நானிடையில்?
கோயில்நீ; கொண்டாடும் கோவும்நீ! — தீயில்
புடம்போட் டெடுபட்ட பொன்னணிநீ இன்றிக்
கடப்பதுண்டோ வாழ்க்கைக் கடல்?

குற்றம் இழைத்திட்ட கோழையாய் உன்னெதிரில்
நிற்கின்றேன்; நீயோ சிரிக்கின்றாய்! — சொற்படியே,
தூதுசென் றுன்னைத் துயர்க்கடலில் ஆழ்த்திவிட்டேன்;
ஏதுரைக்கக் கூடும் எதிர்த்து?

எப்பிறவி இப்புவியில் மீண்டும் எடுத்தாலும்
ஒப்பரிய உன்னுதவி நான்மறவேன் — செப்பரிய
அன்பர் உனைமணக்கும் அந்நாளே என்வாழ்வின்
பொன்னாளாம்; உண்டோ புதிர்?"

தில்லை :

"போதுமடி உன்றன் புகழ்மொழிகள்; ஏதேது?
சோதனைதான் நம்மவர்க்குன் தோளணைந்தால்! — மாதவரை
நான்வந் தடையுமட்டும் நல்லபடி காத்திருப்பாய்.
ஏனென்று கேட்பதும் என்?"

அப்போது மாறனும் அங்கடைய அல்லியுமே
செப்பு மலரடியைச் சேலடையக் — கொப்பணி

*நீட்கூந்தல் மண்ணணைய நீங்கிடா வேட்கையிலும்*
*வாட்கண் இமைக்காள் வலிந்து.*

*கொட்டியது மேளமென்றால் கொஞ்சியது நாதமுமே!*
*"இட்டமுடன் அல்லி எழில்மார்பை — விட்டகலீர்"*
*என்றுடன் சேர்ந்தாரங் கின்சொலால் வாழ்த்துரைக்க,*
*நன்றென்று கொண்டார் நலம்.*

*மாறன் அணிவித்த மங்கலநாண் மார்பசையத்*
*தேறுதல் பெற்றிட்ட தேனிதழாள் — ஏறொப்பான்*
*கைபிடித்த இன்னுணர்வால் கண்கள் களிகூர்ந்து*
*மெய்சிலிர்க்க இன்பம் மிகும்.*

*மணமுடித்த நான்காம்நாள் மாதரசி அல்லி*
*மனையகத்தை விட்டகன்ற மாறன் — குணமற்றோர்*
*வாழ்சிறையை வந்தடைந்தான் வாழ்நாளில் தாய்த்தமிழின்*
*தாழ்வகற்ற எண்ணியதால் தான்.*

*(இன்னிசை வெண்பா)*

*தமிழுக் குயிரீயச் சற்றுந் தயங்கா*
*இமிழ்கடல் ஒப்பார் இருந்திட்ட காவற்குள்*
*தானும் ஒருவனாய்த் தஞ்சமுறத் தங்கமவள்*
*கானகத்துப் பூவானாள் காண்.*

## 18. பொழுது புலர்ந்தது

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியப்பா)*

*ஈராண்டு கழிந்திட்ட; இருந்தும் மக்கள்*
*இழிவுற்ற அந்நாளை மறந்தார் இல்லை!*
*போராட்டம் எனவெழுந்த புனிதர் தம்மைப்*
*புழுவாக வதைத்திட்ட பொல்லார் செய்கை*
*ஊராரும் மறப்பதுண்டோ? உள்ளங் கெட்டே*
*ஊராளும் பொறுப்பினையிங் குணர்ந்து மீண்டும்*
*யாரேனுந் தருவதுண்டோ? இல்லை, இல்லை!*
*எந்நாளும் அவர்நெஞ்சில் இரக்கம் இல்லை.*

தவறிழைத்தான் மகனென்றால் தாங்கும் நெஞ்சம்
   தாய்க்குலத்திற் கிருந்திடலாம்; தாங்கள் சேர்ந்து
புவிபுரக்க அனுப்பிவைத்த மக்கள் என்றால்,
   பூவுலகில் பொறுப்பதுண்டோ? என்றும் இல்லை.
இவரிங்குக் காவலென அனுப்பி வைத்தால்
   இவருயிரை அழிப்பதுவோ? இகழ்வார் அன்றோ?
சுவராக ஆண்டிருந்தார், பொறுத்தோம்; ஆனால்,
   தொல்லைதந்தால் யார்விடுவார்? தொலைப்போம் என்றார்.

ஆட்சியிலே இருந்திட்டோர் பணத்தை அள்ளி
   ஆனமட்டும் இறைத்திட்டார்; அச்சம் இன்றிச்
சூழ்ச்சிபல செய்திட்டார்; தூண்டில் இட்டுச்
   சோர்ந்திருந்த மக்களினைத் தேர்தல் நாளில்
மீட்பதற்கே வந்தவர்போல் மேலும் மேலும்
   மிகையாக அடுக்கிட்டார் மேன்மை யற்று.
காட்சினிக்கே அரியவுயர் கனங்கள் அன்றே
   கண்ணெதிரில் அடிநிற்கக் கண்டார் மக்கள்!

இருபத்தாண் டிந்நாட்டை இந்த மக்கள்
   ஏகபோக உரிமையென ஆண்ட தன்றோ,
திருவுடைய தமிழ்நாடிங் குரிமை யற்றுச்
   செழிப்பிழந்து காட்சிதரும் தீமை யாகும்.
இருந்ததன்றோ அதிகாரம்; இருந்தும் இன்னோர்
   எழிலொழுக இந்நாட்டைத் தமிழ்நா டென்ன
ஒருகணமும் ஒத்ததில்லை; உண்மை சொன்னால்,
   உண்டோநம் இலக்கியத்தில் என்றே கேட்டார்.

மத்தியவல் லரசினரை மகிழ்வு செய்ய
   மக்கட்கு வேண்டாத எதையுஞ் செய்தார்.
சித்தமதில் சிறிதேனுந் தெளிவு மின்றிச்
   சிறப்பற்ற செயல்களையே திரும்பச் செய்தார்.
மத்தியிலங் கிருப்போரும் மக்கள் தந்த
   வாக்கதனால் வந்தவரே! மறந்தார்; ஆனால்,
இத்திறத்த மக்களினை இந்த நாட்டார்
   எப்போதும் மறந்ததில்லை; வாய்ப்பைக் கண்டார்.

தென்னகத்தார் நன்னெஞ்சில் தெய்வம் அன்னார்,
   தெளிவற்ற தமிழகத்தின் புதிய சிற்பி.
தொன்மையிலே ஊறிட்ட கிழவர் கூட
   துடித்தெழவே முழக்கமிடும் பேச்சில் சூரர்!
தென்றலென்னத் தெளிந்தநன்னீ ரோடை யென்ன
   என்றைக்குங் காட்சிதரும் எளியர், தீரர்!
அண்ணனென்றி யாவருமிங் கழைக்கும் அன்பர்;
   அரசியலில் தனித்தலைவர்! அறிவு மேதை!

அண்ணாவைப் பின்றொடர்ந்த மக்கள் வெள்ளம்
அன்பிற்கே அடங்கியது, சொல்வ தென்றால்.
எண்ணாமல் எதிலுமவர் இறங்கார் என்றங்
கெல்லாரும் ஏற்றிடுவர்; இன்பங் காண்பர்.
தண்பேச்சால் செந்தமிழும் தகைவு கொண்டு
தழைத்துயர்ந்து மேன்மையுற்றுத் தனித்து ஓங்கும்.
கண்டிட்டார் விண்டுரைக்கக் கனிவு கொள்வார்;
கற்றவர்கள் அவர்துணையில் பற்றுக் கொள்வர்.

ஊருக்குத் தினமுழைத்தார், உயர்ந்து நின்றார்;
ஓயாமல் சிந்தித்தார்; தூயர் ஆனார்!
யாருக்குந் தீங்குசெய எண்ணார்; என்றும்
எதிரியையும் மதிக்கின்ற இனியர், அண்ணா!
பாருக்கே ஒருமனிதர் பண்பில்; அன்னார்
பாசத்தில் வையகமே பணியும் சொன்னால்.
யாருள்ளார் இவரொப்பார் என்று மக்கள்
இன்புற்றுப் புகழ்ந்துரைத்துத் துன்பம் தீர்வார்!

அரசியலில் நாநயத்தை அண்ணா மட்டே
அழுக்கின்றிப் போற்றுவதை அறிந்த மக்கள்
அரசினையே அவர்பொறுப்பில் அளித்தார் என்றால்,
அவர்சிறப்பை யாரெடுத்துக் கூறல் ஆகும்?
உரம்மறந்து காரிருளில் உழன்ற மக்கள்
உணர்வுற்ற தந்நாளே உண்மை காணின்.
இருளகல ஒளிபெருகப் பரிதி எங்கும்
எழுந்திட்டான்; துயர்துடைத்தான்; இன்பம் தந்தான்!

சீறியெழுஞ் சிங்கமெனத் தீரன் தம்பி,
செயல்வீரன்; போர்மறவன்; சிறந்தான் தம்பி!
கூறியதும் அண்ணனெனின் குறுக்கே பேசான்;
கொள்கைக்கோ தலையினையுங் கொடுக்க வஞ்சான்!
ஏறுநடை தமிழடைந்த திவனால் அன்றோ?
இன்கலையும் எழிலடைந்து சிறந்த தன்றோ?
வீறுகொளத் தமிழினத்தை விழிக்கச் செய்த
மேலாளன் துணையாலே மீட்சி கண்டார்.

நினைத்திட்டால் முடிக்கின்ற நெஞ்சத் திண்மை
நிறைந்திட்ட எழில்முகத்தர் கலைஞ ரோடு
தினைத்தானும் பகைவர்க்குந் தீங்கு நோக்காத்
திண்தோளர் நெடுஞ்செழியர் திகழ்ந்தார்; மற்று
நனைந்திட்ட கான்மயிற்குப் போர்வை தந்த
நன்மக்கள் வழிவந்த நண்பர் சாமி;
முனைக்கஞ்சா மதியழகன், முடிவாய்ச் சொன்னால்
மொத்தத்தில் எல்லாரும் அண்ணா பின்னால்!

யார்தானிங் கெதிர்பார்த்தார் இந்தக் கூத்தை?
எதிர்பாராத் திருப்பங்கள்! என்னே விந்தை!
பார்போற்றத் தலைவனென வாழ்ந்த ஏழை,
படிக்காத மேதையெனப் பலரும் போற்றச்
சீர்தாங்கி நிலைத்திருந்த செம்மல், தீரர்,
சிவகாமி பெற்றெடுத்த செல்வர், மக்கள்
சோர்வோட்ட உழைத்திருந்தும் தோல்வி கண்டார்!
சொல்வார்யார் கரணியத்தைச் சூது மின்றி?

தமிழகத்தை விடக்கிருமி தாக்கிற் றென்றே
தவற்றிற்கே மூலவராய்த் தனித்து நின்று
தமிழகத்தை ஆண்டிருந்த தலைவர் சொன்னார்;
சரித்திரத்தை அறிந்தவர்தாம் சிரித்தார் கேட்டு!
குமுறிடவே தமிழுணர்வைக் கொடுங்கோல் கொண்டு
கூற்றுவர்க்கு விருந்திட்ட கொடுமை அன்றோ,
தமருடனே புறமிட்டுத் தவிக்க நேர்ந்த
தங்கநிகர் மேற்கோளே; உணரார் யாரே?

ஆட்சியினை ஏற்றவுடன் அண்ணா செய்த
அருஞ்செயல்கள் எத்தனையோ! அவற்றுள் நெஞ்சத்
தாழ்வகற்றித் தமிழ்காக்கத் தங்கள் வாழ்வைத்
தாழ்களிடை உயிரீந்த தமிழர் தம்மின்
சூழ்ந்திருந்த துன்பமெலாம் தொலைக வென்று
சொன்னபடி செய்திட்டார்; அமைதி கண்டார்.
வாழ்கவவர் நாமமென வையம் கூட்டும்
வாழ்த்தொலியோ ஆர்த்தெழுந்து வானை எட்டும்!

சிரிப்பூறும் இதழோடு சிங்கம் ஒப்பச்
சிறைவிட்டு வெளிவந்த வீரர் தம்மை
விருப்போடு வரவேற்றுத் திரண்ட கூட்டம்
வீரரெனப் புகழ்ந்துரைத்து மேன்மை செய்யும்.
செருவென்று மீள்கின்ற செம்மல் ஒப்பச்
செந்தமிழைக் காத்தவர்கள் திரும்பி வந்தார்;
தெருவெல்லாம் பாட்டொலிக்க எங்கும் மக்கள்
தென்னவரை வரவேற்று நன்றி சொன்னார்!

## *19. வாழ்வு மலர்ந்தது*

*(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

*சிறைவிட்டு வெளிவந்த செல்வன் முன்னே*
*சேயினையே எதிர்நீட்டித் தில்லை வந்தாள்;*
*நிறைவான மனத்தோடு நின்றார் பின்னே,*
*நேரிழையின் தாய்தந்தை நெஞ்சம் விம்ம!*
*குறைவற்ற கொஞ்சுமொழிப் பிஞ்சு நெஞ்சைக்*
*கொண்டிட்டான் கைகளிலே; குறிப்பாய்த் தில்லை,*
*"சிறைசென்ற உன்தந்தை வந்தார் என்றோ,*
*சிரிக்கின்றாய்? என்மைந்தா, நன்று." என்றாள்.*

*"மருமகனே, வரவேண்டும்; மயக்கம் தீர்ந்தோம்;*
*மன்னிப்பாய் எங்களுடை மடமை எல்லாம்.*
*இருளகற்றி வாழ்க்கையிலே இன்பம் சேர்க்கும்*
*இன்னொளியை நானின்றே இங்கே கண்டேன்.*
*அருளுடைய என்மகள்தான், அல்லி வீட்டில்*
*அமைதியின்றிக் காத்திருப்பாள்; அதனால் நாமே*
*இருந்திடுநம் ஊரடைவோம்; இன்று மாலை*
*இருக்கின்ற தொருவிருந்தஃ தென்ன வென்றால்,*

*என்மருக, உன்மைந்தன், இவனு தித்த*
*இந்நாளைக் கொண்டாட எல்லாம் செய்து*
*நின்றபடி காத்திருப்பாள் நிலையைப் பற்றி*
*நெஞ்சிழந்த அல்லியுமே நினைவு கொல்ல!*
*என்மகளாய் அல்லியினை இந்நாள் மட்டில்*
*எந்தவிதக் குறைவுமின்றி ஏற்றி வந்தேன்;*
*என்மகளை இப்பெண்ணை வாழ வைக்க*
*என்னிடத்தில் எதுவுமில்லை." என்றார்; தேர்ந்தான்.*

*அம்மாவைக் காட்டென்றான்; குழந்தை ஆங்கே*
*அருகிருந்த தில்லையினைக் காட்டிற் றன்றோ!*
*நம்பாமல் குழந்தையினை மீண்டுங் கேட்டான்;*
*நாணிநின்ற தில்லையையே அம்மா என்னும்.*
*கொம்புக்குக் கொம்பலையுங் குரங்கை யொப்பக்*
*குணமாறித் தினமலையும் கொடியர் ஊடே*
*செம்பூவின் இதழ்கூட்டிச் சிரிப்பைச் சிந்தும்*
*சேய்களுடை குணங்களினும் சிறந்த துண்டோ?*